[illegible]

V 5 no. 2 14 Ja 1932

JL
7211, N28 KN
N32.5.3
188950.

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

16 FEB 1932

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ௵ ஜனவரி ௴ 14௳ [No. 2

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 21
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா — சுயம்வர காண்டம் 23
3. அப்பர் (64 கலை—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 26
4. குன்றுடையானும் மக்களும்
W. V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 28
5. கந்தபுராணமும் சங்கநூல்களும்
பண்டிதர் R. திம்மப்பா ஐயர் 29
6. மானத சாத்திரம் (குறிப்பு).
T. P. மீனாக்ஷிசுந்தரம். M.A., B.L. 31
7. ஜூலியஸ்ஸீஸர் (அங்கம் 1. களம் 2.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 33
8. கம்பராமாயணம் (விராதன் வதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 36
9. வர்த்தமானம். 39

சந்தாத் தொகையை அனுப்பிவைக்காத நண்பர்களுக்கு இன்று முதல் வி. பி. அனுப்பி வருகின்றோம். தம் கைக்கு எட்டியவுடன் அதனைப் பெற்றுக்கொள்ளத் தவறுவாராயின் எமக்கு மிகுந்த நஷ்டமாகும்.

தபால்கட்டணம் உயர்ந்திருப்பதால் மலேயே தென்னாப்பிரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு இவ்வாண்டிலிருந்து சந்தா ரூ. 9-8-0 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அவ்விடங்களுக்கு வி. பி. அனுப்ப இயல்வதில்லையாதலின் அங்கிருக்கும் நண்பர்கள் விரைவில் தம் சந்தாத் தொகையை அனுப்பும்படி வேண்டுகின்றோம்.

மானேஜர்.

## கலாநிலயம்

### இறுமாந் திருப்பன் கொலோ? 1.

“இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பர் என்றெண்ணவோ திடமில்லையே” என்று ஏங்கிய அப் பெரிய மொழிகளில், யாக்கைநிலையாமை யனைய உலகறி உண்மைகளே அடங்கி இருக்கின்றதென் றெண்ணமல், பின்னுஞ் சற்றுப்புகுந்து நோக்குவோமெனின் வாழ்க்கைத் தத்துவத்தின் அறியா இரகசியங்கள் இரண்டொன்று அரிதிற் புலப்படும்.

எதனை மறந்தாலும், “இருக்கின்றேன் நான்” என்னும் நினைவு ஒருபோதும் ஒருவருள்ளத்தையும் விட்டு நீங்குதில்லை. இந்தச்சொற்கள் கேட்காமையினாலேயே அந்நினைவு இடைவிடாது இருப்பதில்லை என்று எண்ணலாகாது. இம்மொழிகளின் குரல் அழிந்திருப்பினும், வாழ்க்கை நிகழ்வதெல்லாம் அந்நினைவின் இயக்கமே என்பது உற்றுணர்தற்குரியதோர் வாய்மையாம். இதனை, “இருப்பதன் இறுமாப்பு” என இக்கட்டுரையின்கண் சுருங்க வழங்குவோம். இருக்கின்றதென்பதன் வகைகளிலெல்லாம் இவ்விறுமாப்பு வெளிப்படுகின்றது.

காலம் இடம் என்னும் அவ்விரண்டு தத்துவங்களுடன் சார்ந்தையல்லாமல், ‘இருத்தல்’ என்பதொன்றும் பொருள் பெற்றிடாது. காலம் இடம் என்னும் இவ்விரண்டு தத்துவங்களும் அலகு இல்லாதன. இவைகளில், காலத்திற்கும் இடத்திற்கும் இடையே காணக்கூடிய பேதம் ஒன்றுளது. இடம்விட்டு இடம் பெயர்கின்றபோது, இருந்த இடம் இது, கடந்த இடம் இது, சேர்ந்த இடம் இது, என்று குறிப்பிட்டுக் கூற இயலும். காலத்தைப்பற்றியோ அவ்வாறு கூறுவதன் பொருள் மயக்கத்திற் கிடமாகின்றது. நேற்றிலிருந்து புறப்பட்டு இன்றைப் பொழுதைக் கடந்து நாளைச் சேர்வோம், என்னும் வாக்கியத்தின் கருத்தை என்னவென்று கொள்வது? இம் முக்காலத்திலேயும் நாம் இருந்தபடிதானே இருக்கக் காண்கின்றோம். ஆதலாற்றான், இவ்வாறு கூறுவதில் ஏதோ பிழையுளதென ஒருவாறு நம் மனம் ஊகித்துக்கொள்வதால், காலத்தைக் கடந்து தான் கழிகின்றதென்பதற்கு மாறாகக் காலந்தான் தன்னைக் கடந்து கழிவதென மதி

த்து, "நேற்றையதினம் நீங்கிபது, இன்றையதினம் இருக்கின்றது, நாளையதினம் வரும்" என்று நம்மைச் சொல்லவைக்கின்றது. இதுதான் நிச்சயமோ எனின் அப்படியும் நினைப்பதற்கில்லையே. நேற்று என்பது எங்குப் போயிற்று? நாளை என்பது எங்கிருந்து வரும்? நேற்றிற்கும் நாளைக்கும் ஏதேனும் வேற்றுமை உளதோ! உளதெனின் அவ்வேற்றுமை எவ்வகைத்து? நிலைத்த நாட்டமுடையவர்களாய் இதனைக் கருதுங்கால் கலக்கமே மிகுகின்றதன்றித் தெளிவுபெறத் தேர்ந்துகொள்ளவல்லவர் மிகச் சிலர். காலமோ கழிவதுமில்லை; வருவதுமில்லை. மற்று நாம்தான் அதனூடு விரைகின்றோம். புகைவண்டியிற் போகின்றவொருவனுக்குத் தான் இருப்பதுபோலவும், அயலிலுள்ள மரமுஞ் செடியும் மலைகளும் தன்னைக் கடந்து ஓடுவதுபோலவும் தோன்றுகின்ற வஞ்சனைக்கு இணையாம் இது. புகைக்கூண்டில் ஏறி உயர்கின்ற ஒருவன், தான் மேல் போவது உணராமல் தரைதான் கீழே கீழே ஆழ்வதுபோற காண்பான். எனின், இறப்பும் நிகழ்வும் எதிர்வும், காலத்திற்கில்லை, நமக்கேயுளது, என்றாலும் முன் உரைத்தபடி நேற்றினின்று இன்றைக்கு நாம் மாறிய தன்மை இன்னதென்பதை ஐயமற அறிதற்கியலவில்லையே. நாமும் பெயராமல், காலமும் பெயராமல், இவ்வண்ணம் இருந்தபடியே இருக்கும் இந்த நிலைமையில் இறப்பு நிகழ்வு எதிர்வு என்று வழங்கவேண்டியது இன்றியமையாததாகின்ற இந்த இக்கட்டிற்கு என்ன செய்வது!

இன்னபடி, "நம்முடைய காலம்" என்னுமது, மிகவும் எளிதாய் வழங்கி விவகரிக்கப்படுகின்றதெனினும், அதனில் மயக்கத்திற்கு இடமுளதென்று கூடத் தெரிந்திராதார் எண்ணிறந்தோர்—இம்மயக்க மெய்திப் பின் அமைதிகண்டவர் ஒருவரிவர் உளரோ என்பது அறியோம். தன்னுடைய காலத்தின் மெய்ம்மையைத் தெரிந்துகொள்ள மாட்டாதானை நோக்கி "உன்னையே நீ தெரிந்துகொள்" என்பதன் பயனென்ன? தத்துவ உணர்வுடையவர்களெல்லோரும் இதனையே முறையிடுகின்றனர். சமய சாத்திரங்களும் இதனையே பற்பல வகைகளில் ஓதுகின்றன. எனினும் எய்துவது யாது?

'உன்னை அறிந்துகொள்' என்னும் இவ்விதி ஆன்மாவைக் குறித்தே வற்புறுத்தப் பெறுகின்றதாயினும் அதன் அருமையைக் காட்டுவதற்கு அவ்வளவு தூரங்கூடப் போகவேண்டியதில்லையே. வீடுதோறும் கண்ணாடிகள் இருக்கின்றன. ஒவ்வொருவனும் நாடோறும் தன் முகத்தைக் கண்ணாடியில் எத்தனையோ பன்முறை காண்கின்றான். எனினும், எவனுக்கேனுந் தன் முகச்சாடை இன்னவாறிருக்கின்றதென்பது தெரியுமோ! இதனுண்மையைச் சோதிப்பதற்கு நமது வாசகர்கள், இப்பொழுது தத்தம் முகச்சாடையை நினைவுபடுத்திக்கொள்ள முயன்று பார்க்கலாம். நம்முடைய முகவடிவம் எத்துணை முயன்றாலும் நம்முடைய நினைவிற்கு வந்திடாது. முப்பது வருடங்களுக்குமுன் நம்முடன் புகைவண்டியில் ஒருநாள் வந்தவனுடைய முகம் இன்றைக்குத் தெளிவாக நம் நினைவிற்கு வரலாம்; மற்று முப்பொழுதும் நம்முடனேயே பழகுகின்ற நம்முடைய முகத்தையேயோ நினைக்குமாறில்லையே? இந்தப் பரிபவத்தை என்னென்று வியப்பது? இவ்வண்ணம், நம்முடைய [illegible]தின் தன்மையையேனும் நம்முடைய முகத்தின் உருவத்தையேனும் அறியமாட்டாத நாம்; "இருக்கின்றோம்" என்றுமட்டும் விட்டுரைப்பதற்கு வாய்பெற்ற வரலாறு யாவதாயிருத்தல்கூடும்? இதனைச் சிறிதளவு இங்குச் சிந்தித்துச் சோதனை செய்து பார்ப்போம்.

'இருக்கின்றேன்' என்று ஒருவன் சொல்லும்போது, தான் இருக்கத்தான் வேண்டும் என்னும் இச்சையைத் தெரிவிக்கின்றானேயன்றி அவன் இருக்கத்தான் இருக்கின்றான் என்ற நிச்சயத்தை நினைக்கவில்லை என்னும் இரகசியத்தை உணர்ந்தால் பிறகு காலம் என்பதன் தத்துவம் ஒருவாறு வெளிப்படும், என ஜர்மனிய தத்துவ நூலறிஞர் ஷாபன்ஹார் (Schopenhaur) என்பவர் கருதுகின்றார். இந்தக் கொள்கை, வாழ்க்கையின் பற்பல இரகசியங்களைக் விளக்கத் தக்க உதவி செய்பவல்லதென்பதில் ஐயமில்லை. "எல்லாம் கழிந்துகழிந்து எதுவொன்றிற் சேர்கின்றதோ அதுவே நான் நான்" எனக் காலம் பறைசாற்றிக்கொண்டிருக்க, "உன்முயற்சியெல்லாம் வீணாக்குகின்றேன் யான் யான்" என்று இவ் விச்சையானது அறைகூவிக்கொண்டிருக்கின்றது.

இருந்திருந்த தொன்றும் இருக்கின்றது ஆக முடியாது: ஒருபோதும் இருந்திராதது எப்படி இருக்கின்றதில்லையோ அப்படியே, இருந்திருந்ததும் பின்னர் இருக்கின்றதென்பதற்கில்லை. மற்று, இப்பொழுது இருக்கின்றவொன்றை நாம் அடுத்தநிமிடத்தில் 'இருந்திருந்தது' என்றே சொல்லவேண்டியவர்களாயிருக்கின்றோம். இருந்திருந்த வொன்றும்இப்பொழுது இருப்பதன்றாதலின்நிகழ்காலத்தை நோக்குங்கால், ஒருபோதும் இருந்திராத ஒன்றிற்கும் இருந்திருந்த மற்றொன்றிற்கும் யாதும் பேதம் இல்லையே. ஆதலின் நாம் ஒவ்வொருவரும், "இருக்கின்றோம்" என்று உரைக்கின்றபோது நிகழ்கின்ற அவ்வொரு நிமிடத்தளவே அது நிச்சய மாகுமன்றி, போன நிமிடத்தில் இருந்திருந்தவர்தாம் இந்த நிமிடத்தில் இருக்கின்றோம் என்பது கால தத்துவத்தின்படி ஏற்புடைத்தன்று. ஏனெனில் இருந்திருந்த ஒன்று மறுநிமிடமே இல்லாததாகி விட்டபடியால், அப்பொழுது இல்லாததாகிவிட்ட ஒன்றினை இப்பொழுது இருக்கின்றதென்று எவ்வாறு சொல்ல இயலும்? தாயுமானவர், "இன்றைக்கிருந்தோரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லை" என்ற விடத்து இத்தத்துவத்தையே உட்கொண்டவராதல்வேண்டும். இது ஆயுள் நீங்கி மாள்வது நிச்சயம் என்னும் அவ்வுலகறிவுண்மையை ஓதுகின்றதென்பதனிலும் "இன்றைக் கிருந்தவரேதான் நாளைக்கும் இருப்பவர் என்று எவ்வண்ணம் நிச்சயமாய்ச் சொல்வேன்" என்று இவர், முன் நாம் இங்கு உரைத்த காலதத்துவத்தைச் சார்ந்து, அயிர்த்தாரோ என்று நினைத்தலுங்கூடும். 'இன்றைக்கிருந்தாரை' என நிகழ்வையே இறப்பிற் சார்த்திச் சொல்லிய இவ்விரைவும் இக்கருத்தை வலிவு செய்கின்றது. இன்று நாளை என்னும் இது, அறுபதுநாழி எல்லையைக் குறிக்காமல் காலச் செலவென்று நம் மனம் கருதுகின்றவொன்றையே காட்டுன்றதென்பது வெளிப்படை இந் நிமிடம் அடுத்தநிமிடம் என்றாலும் இது ஒக்கும். இவ்வண்ணம் ஒவ்வொரு நிமிடமும், உலகப்பொருள்களெவ்வளவும் அவ்வவ் நிமிடத்தில் ஒடுங்கி முடிகின்ற தத்துவத்தை, "ஹரதி நிமேஷாத் காலஸ் ஸர்வம்", என்ற சங்கராசாரியார் வாக்கியத்திலும் காணலாமே. மற்று "புனரபி ஜநநம் புநரபி மரணம்" என்று பாடிய அவர் சீடரின் கருத்திலும் இதுவே யிருந்ததென்றெண்ணினும் பிழையில்லை.

இவ்வண்ணம், நம்முடைய முகமேமுதல் நம் [illegible]காலம் ஈறுக ஒன்றும் நிச்சயமில்லா இந்நிலையில் மனிதன், "இருக்கின்றேன்" என்னும் நிச்சயத்தால் வி[illegible]ன்ற இரகசியம் யாது?



# தமிழ்ப் பாடம் 1.

## நள வெண்பா—சுயம்வர காண்டம்

[14-வது பக்கத் தொடர்ச்சி]

4 வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன—கஞ்சங்
கலங்குவன மாளிகைமேற் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு.

பதப்பிரிவு:—வெம் சிலையே கோடுவன மென் குழலே சோருவன அம் சிலம்பே வாய் விட்டு அரற்றுவன கஞ்சம் கலங்குவன மாளிகைமேல் காரிகையார் கண்ணே விலங்குவன மெய் நெறியை விட்டு.

அன்வயம்:—வெம்சிலையே கோடுவன. மென்குழலே சோருவன. அம்சிலம்பே வாய்விட்டு அரற்றுவன. கஞ்சம் கலங்குவன. மாளிகைமேல் காரிகையார்கண்ணே மெய்ந்நெறியைவிட்டு விலங்குவன.

பதவுரை.

வெம் - கொடிய
சிலையே - விற்களே
கோடுவன - கோணலாய் இருப்பவை,
மென் - மிருதுவாகிய
குழலே - கூந்தலே
சோருவன - சோர்வடைந்து இருப்பன,
அம் - அழகிய
சிலம்பே - சிலம்புகளே
வாய்விட்டு - வாய்விட்டு
அரற்றுவன - கதறுகின்றவை,
கஞ்சம் - தாமரைகளே
கலங்குவன - கலங்குகின்றவை,
மெய் - உண்மையாகிய
நெறியைவிட்டு - வழியைவிட்டு
விலங்குவன - விலகிப்போகின்ற சொற்கள்
மாளிகைமேல் - மாடங்களின் மீதுள்ள
காரிகையார்கண்ணே - மாதர்களிடத் திலேயே
(வழங்கக் காணலாம்.)

கருத்து:—அந்த நகரத்தில், நேர்மையற்றனவும், சோர்வடைந்து தளர்வுற்றனவும், துக்கத்தாலும் பயத்தாலும் கூக்குரலிடுகின்றவர்களும், கலக்கம் எய்தினவர்களும், பொய்சொல்லுகின்றவர்களும் இல்லை.

விளக்கம்:-அந்த நகரத்தில் நேர்மையா யில்லாதன இருந்தனவோ? இல்லை. இல்லையெனில் கோணலாயிருப்பவைகளே அங்கு இருந்ததில்லையா? அவ்வாறன்று; எதுவொன்று கோணலாயிருக்கவேண்டுமோ அதுவொன்றே அங்குக்கோணலாயிருந்தது. அவ்வாறு கோணலாயிருந்தது எது? வெம் சிலையே - கொடிய வில் மாத்திரமே. இனி, உடலும் ஆவியும், பிணி வறுமை முதலிய துன்பங்களால் தளர்ந்து சோர்வுற்றன அந்நகரத்தில் இருந்தனவோ! இல்லை, எல்லாம் கிளர்ந்துதான் இருந்தன. ஆனால் சோர்ந்து கிடந்தது ஒன்றுமே இல்லையோ? அவ்வாறன்று; எதுவொன்று நெறித்திராமல்இயற்கையிலேயே சோர்ந்திருக்கவேண்டுமோ அதுவொன்றே சோர்ந்திருந்தது. அன்னதற்கு உதாரணம் உளதோ? மென்குழல்-மாதர்களது துவளும் தன்மை வாய்ந்த மெல்லிய கூந்தலே. வலியவர் செய்தீமைகளால் நலிவுற்றும், வறுமைவிபத்து அகால மரணம் போன்ற இடுக்கண்களாலும், 'கொடுமையோ கொடுமை' என்று மாந்தர் கூக்குரலிடக் கேட்பதற்கு நேருமோ அந்த நகரில்? நேரவே நேராது. ஆனால் வாய்விட்டு அரற்றுவன ஒன்றேனும் இருந்ததில்லையோ? வாய்விட்டுக் கதறுவனபோல் காதிற்குக் கேட்பதொன்று இருந்ததேயன்றி உண்மையில் துன்பத்தால் அழுவன இல்லை. ஆயின், அவ்வாறு காதில் கேட்பது எது? அம் சிலம்பே - மாதர்கள் நடக்கும்போது கலீர் கலீர் என ஒலிக்கும் பாதச் சிலம்புகளே. கலங்குவன உண்டோ? கஞ்சம் - (நீர் அலையும்போது குளத்தில் கலங்குவதுபோல் தோன்றும்) தாமரையொன்றே. மெய்ந்நெறியைவிட்டுவிலகும் (அதாவது பொய்யான) சொற்கள் அந்நகரத்தில் எப்பொழுதேனும் யாரேனும் சொல்வாரோ? சொல்லவே சொல்லார். ஆயின் பொய் என்பதே அங்கு வழங்கியது இல்லையோ? அவ்வாறன்று; எந்தவொரு நிலையில் பொய்போன்ற சொற்களும், மெய்பிறழ்ந்த பொய்யென்னும் பாவத்தில் சேராவோ அந்தவொரு நிலையிலேயே பொய்போன்ற சில சொற்கள் மாந்தர் வாய்நின்று வரும். அப்படிப்பட்ட நிலைமை யாரிடத்தில் பழகும்போது நேரும்? மாளிகைமேல் காரிகையார்கண்ணே - மாளிகைகளின் மேல் தம் நாயகிகளிடத்தில் பொய்போன்ற சில சொற்கள் பாராட்ட ஆடவர்களுக்கு நேரும். (இங்குக் கண் என்பது பார்க்கும் உறுப்பாகிய 'கண்' அன்று. இடத்தைக் குறிக்கும் உருபு. காரிகையார்கண்ணே-மாதர்களிடத்திலே.வீட்டின்கணிருப்பான், என்பதுபோல.)

விரிவுரை:—இந்தச் செய்யுளும் அடுத்த செய்யுளும் மாவிந்தநகரத்தின் தருமமும்இன்பமும் வாய்ந்த வாழ்க்கையைக் காட்டுகின்றன. இந்தச் செய்யுளில், வளைதலில்லா நேர்மையும் தளர்ச்சியில்லாக் கிளர்ச்சியும் வருத்தமில்லாக் களிப்பும் கலக்கமில்லா அமைதியும் பொய்கலவா மெய்யும், அடுத்த செய்யுளில், கல்வியும் அறிவும் செல்வமும் ஈகையும், அம்மாவிந்தநகரத்தில் தங்கியிருந்த தன்மையைக் காணலாம். இவைகளைப்பொதுவகையில் கூறிவிடாமல் புகழேந்திப்புலவர் மிகத்திறப்படத் தெரிவிக்கின்றார். எல்லோரும் சொல்வதுபோல் சொல்லாமல் ஒரு பொருளைப் புலவர்கள் சுவைபெறக்கூறுந் திறத்தினை அணி என்பர். அணிஎன்றால் அழகு அல்லது ஆபரணம் என்பதுபொருள். வடமொழியில் அலங்காரம் என்பதும் ஆங்கிலத்தில் Figures of Speech என்பதும், தமிழில் அணியெனப்படும் இதுவேதான். இயற்கையிலே அழகுவாய்ந்த ஒரு பெண்ணிற்கு ஆபரணங்கள் பூட்டினால் எப்படி அவளழகு பின்னும் அதிகமாகின்றதோ அப்படியே உயர்ந்த ஒரு கருத்தை அல்லது பொருளைச் சொல்லும் திறத்தால் அலங்கரித்துப் பெருமை படுத்துவதால், இதற்கு அணி என்று பெயராயிற்று. கருத்தும் பொருளும் உயரியதாய் இருந்தால்தான் அணியும் சிறக்கும். தமிழில் நூற்றிற்கு மேற்பட்ட அணி வகைகள் வழங்கிவருக்கின்றன. உவமையணி என்பது ஒன்று. அதுஒன்றற்கொன்று குணத்தினாலோ தொழிலாலோ பயனினாலோ ஒத்திருப்பதைக் காட்டும். குளிர்ந்த தன்மை ஒளி முதலிய குணங்களால் சந்திரனை

மாதர்களுடைய முகத்திற்கு உவமைகூறுவர். ‘பிரகாச மான முகத்தையுடையவள்’’ என்று ஒரு நங்கையைக் குறித்துச்சொன்னால் அணியொன்றும் அமைக்காமல் கூறுவதாகும். ஆனால் ‘மதிபோன்ற முகத்தாள் இவள், அல்லது மதிமுகத்தாள்’ என்று சொல்வதானால் உவமையணி அமைந்திருக்கும். அப்படியே, தனக்கென வைக்காமல் கணக்கின்றிக் கைம்மாறு வேண்டாது அளிக்கின்ற வள்ளல் ஒருவனை முகிலனைய வண்மையான் (முகில் - மேகம்) என்பதும் உவமை அணி. உவமை அணி பலவிதம். அவைகளை வருமிடத்தில் காட்டுவோம். அணிகளின் தன்மை இன்னதென்று அறிதற்குமாத்திர மிவ்விடத்தி லிது கூறப்பட்டது.

இந்தச்செய்யுளும் அடுத்த செய்யுளும் ஒழித்துக்காட்டு அணி என்னும் அணியால் அலங்கரிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த அணியின் இலக்கணம் என்னவென்றால்,—“இருப்பது இதுதான்’’ என்று காட்டி மற்றதெல்லாம் இல்லையென்று ஒழித்துவிடுவது. வளைவது வில்லே என்றதால் அரசனது செங்கோல், மாந்தரது வாய்மை ஒழுக்கம் உருவம் முதலியன யாவும் கோணுவதில்லை என்று விளங்கவில்லையா? அவ்வாறே மற்றவைகளையும் ஆராய்ந்து பாருங்கள். இந்த அணியின் இலக்கணமும் சுலபம். அதனைச் செய்யுளில்வந்தவிடத்துத் தெரிந்துகொள்வதும் மிகஎளிது. கவிகள் இந்த ஒழித்துக்காட்டணியின் உதவிகொண்டு, இருக்கக்கூடாதவைகளை இல்லையென்று ஒழிப்பதினாலேயே இருக்கவேண்டிய தன்மையோ பொருளோ இருக்கின்றதென்றும் நிலைநிறுத்தியவரும் ஆவார். பாவம் துயரம் வறுமை அறியாமை முதலியன இன்மையையும், நீதி இன்பம் செல்வம் கல்வி வண்மை முதலியன நிலைப்பதையும் இச் செய்யுள்களில் காணலாம். இனி, இவ்விதம் இருக்கத்தகாதனவற்றை, சிலபொருளாலும் சில நிலைமையாலும் சில தொழிலாலும் சில பயனாலும் ஒழித்துக் காட்டுவர். இவைகளன்றிச் சொல்லளவிற்றானே ஒழித்துக் காட்டுவதும் இயலும்.

தெரிவன நூல், தெரியாதன மாதர் இடை, இல்லாதன இரத்தல், கல்லாதன கரவு, என்று சொல்லும் இடத்தில், பொருள்கள் குறிக்கப்பட்டன. சிலையே கோடுவன, குழலே சோருவன, கஞ்சம் கலங்குவன, என்று காட்டும்போது கோணல் சோர்வு கலக்கம் என்னும் நிலைமைகள் குறிக்கப்பட்டன. சிலம்பே அரற்றுவன, என்றபொழுது கதறுவதாகிய தொழில் அல்லது செய்கை விலக்கப்பட்டது. ஒருவரோடு ஒருவர் உரையாடும்போது பொய் என்னும் பயன் பிறக்க வேண்டுமாயின் அது மாதரிடத்தில் ஆடவர் பேசுகின்ற ஒரு நிலையிலேயே நிகழக்கூடியதாகும் என்று கூறுங்கால் பொய் எனும் பயன் ஒழிந்தது. சொல்மாத்திரத்தில் ஒழித்துக்காட்டுவதற்கு இவ்விரு செய்யுள்களிலும் உதாரணம்இல்லை. அதற்கும்இரண்டொரு உதாரணம் கூறலாம்:—ஓர் அரசனைப்பார்த்துக் கவியொருவன், “அரசே, உனது நாட்டில் தீத்தொழில் செய்வோர்கள் அந்தணரே’’ என்று புகழ்ந்தான். தீத்தொழில் செய்வோர்கள் என்ற வாசகத்தைச் சொல்லளவில் நோக்கும்போது, தீ - தீமையான, தொழில் - காரியங்களை, செய்வோர்கள் - செய்கின்றவர்கள் என்ற பொருள் தோன்றுகிறது. ஆனால், பின் அந்தணர் என்று வருவதால், தீத்தொழில் என்பதற்குத் தீ - நெருப்பில், தொழில் - செய்யும் யாகம் ஹோமம் முதலிய கருமங்கள், என்றபொருள் ஏற்றதாகித் தீத்தொழில்என்பது அவ்வரசனது நாட்டில் சொல்மாத்திரத்தில் இருந்தால் இருக்கலாமே யல்லாது மற்றெவ்வகையிலும் யார்மாட்டும் செய்கையில் காண்பதற்கில்லை. தீ என்றால் அக்கினி என்பது ஒரு பொருள். இன்னொன்று தீமை என்ற பதம் தீ என்று இங்கு நின்றது. (இப்படி இருவேறு பொருள்தரப்பதங்களை உபயோகிப்பதைச் சிலேடை என்று கூறுவர். அதன் இலக்கணம் வேறோரிடத்தில் இனி விளக்கப்பெறும்.) “அரசே, உனது நாட்டில் சிறையென்பது பறவைகளுக்கே அல்லாமல் மனிதர்களுக்கு இல்லை’’ என்று புகழ்வதும் சொல்லால் ஒழித்துக்காட்டுகின்ற அணியாம். சிறை என்பதற்கு இறகு, காவற்கூடம் என்ற இரண்டு பொருள்கள் இருக்கின்றன. சிறை என்னும் சொல்லைப் பறவைகளிடத்தில் இறகு என்னும் பொருளில் காண்பதொன்றே அந்நாட்டில் இயலும். மனிதர்க்குச் சிறை (காவல்கூடம்) இல்லை.

அதிவீரராமபாண்டியன் இயற்றிய ‘நைடதம்’ என்னும் நளனது கதையில் நிடதநாட்டை இவ்வொழித்துக்காட்டணியால் வருணித்திருப்பதையும் பார்க்கலாம். அச்செய்யுள் பின்வருமாறு :—

கொடியன மகளிர் தங்கள்
குழையுறுண் மருங்கே வாளா
படுகொலை புரிவ மாதர்
படைநெடுங் குவளைக் கண்ணே
அடிமிசை முறையிட் டென்று
மாற்றுவ சிலம்பே சூழ்ந்து
கடிமது நுகர்வ வன்னோர்
கருங்குழற் காமர் வண்டே.

[ஆடவர்க்கு ஆசையூட்டி வருத்துகின்ற மாதாது துவளும் இடையே கொடியவைகள். பார்வையால் மையல் விளைத்து உயிரைக்கவர்ந்து கொலைஎன்னும் தொழிலைச் செய்வன அம் மாதர் கண்களே. காலில் விழுந்து கதறுவன அவரணிந்த சிலம்புகளே. அவர் கூந்தலிலணிந்த பூக்களின் தேனைப் பருகும் வண்டுகளல்லாது மதுக்குடிப்போ ரில்லை] கொடியன, என்பதற்குக் கொடுமையானவை அல்லது கொடிபோன்றவை என இருபொருள்கள் இருப்பதால், சொல்லளவிலும் கொடுமை ஒழித்துக்காட்டபடுகின்றது. இந்த ஒழித்துக்காட்டணிக்கு வடமொழியில் பரிசங்கியாலங்காரம், என்பது பெயர்.

இதுவரையில் இந்தச் செய்யுளில் கையாண்ட அணியின் இலக்கணத்தைக் கூறிவந்தோம். பொருளிலக்கணத்தின் ஒருபகுதியும், இங்கு அறியவேண்டியிருக்கின்றது. அப் பொருள்இலக்கணம், அகப்பொருள்இலக்கணம், புறப்பொருள் இலக்கணம் என இருவகைப்படும். பொருளிலக்கணம் என்னும் இந்த இலக்கணம் தமிழ்மொழிக்கேஉரியது. அகப்பொருள் இலக்கணம்என்பது ஒருவனுக்கும் ஒருத்திக்கும் காதல் உதிப்பதுமுதல் பின்னர் அவர் வாழ்க்கையுள்பட்டு வாழும் வாழ்வையெல்லாம் கூறிப் பற்பல செவ்விகளில் அவர்களது செய்கையும் மனநிலையும்இருக்கவல்ல விதங்கள் அனைத்தையும்விளக்கிவிதி கூறுவதாகும். அகப்பொருளிற்கு இலக்கணம் தொல்காப்பியம் கூறுவதுடன் மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளேகூடப் பணித்தருள அது “ இறையனாரகப் பொருள் ’’ என்னும் பேரோடு வழங்கப்பெற்று வருகின்றது. தர்மம் அர்த்தம் காமம் அல்லது அறம் பொருள் இன்பம் என்று வழங்கப்படுகின்ற மானுடப் பயன்களுள் மூன்றாவதாகிய காமம் அல்லது இன்பம் என்பதின் உண்மைத்தன்மையை விளக்கிக் காட்டும் இலக்கணம் அகப்பொருள் இலக்கணம். திருக்குறளின் காமத்துப்பால் கூறுவதும் இதையே. இது வல்லாத மற்றப் பொருள்களின் இலக்கணம் புறப்பொருள் இலக்கணமாம் வேந்தரையும் அவரிடும் போரையும் இன்னும் அரசர்க்கிசைந்த கொடை முதலிய குணங்களையும் பெரும்பான்மை இப் புறப்பொருள் இலக்கணம் வகுத்துக்காட்டும்.

முன்னைய செய்யுளில் ஊடலைப்பற்றிச் சொல்லிய செய்தி அகப்பொருளைச் சார்ந்ததே. அகப்பொருளில் அடங்கிய ‘பொய்பாராட்டல்’ என்னும் ஒரு செய்தியையுந்தெரிந்துகொள்ளாமற்போனால், “மாளிகைமேற் காரிகையார் கண்ணே விலங்குவன மெய்ந்நெறியை விட்டு’’ என்பதன் கருத்தேனும் அதனில் அடங்கியுள்ள நயமேனும் விளங்காது. பொய்பாராட்டல் என்பது நாயகனும் நாயகியும் இன்புற்று ஒருவரோடொருவர் அளவளாவிப் பேசும்பொழுது நாயகன் தன் தலைவியின் அழகையும் தன்மையையும் வியந்து உரைப்பது ஆகும். உவகையாலும் வியப்பினாலும் பிறக்கும் அவ்வுரைகளில் உலகமலைவான சில பொய்கள் கலந்திருக்குமாயினும், அதனை இயல்புணர்ந்த ஒருவரும் மெய்யென்று கொள்ளார். ஆதலால் அது பயனளவில் பொய்யாகாது. பொய்யை இருவகையாய்ப் பிரித்து, சொல்வதை மெய்யென்று ஒருவனை நம்பச்செய்யும் எண்ணத்தோடு சொல்லப்படுகின்ற பொய்களை மெய்ப் பொய்கள் என்று அழைக்கலாம். மருந்து வர்த்தகம் செய்வோர் ‘இது எல்லா நோயையும் தின்றமாத்திரத்தில் தீர்க்கும்’ என்று விற்கும்போது அது மெய்யான பொய். அப்படிக்கின்றி, சொல்வது பொய்யென்றுசொல்லுவோர்க்கும் கேட்போர்க்கும் ஐயம் சிறிதேனு மில்லாமல் தெரிந்திருந்தும்சொல்லப்படுமாயின் அவைபொய்யானபொய்யாகும். இவ்விதமாய்ப்பொய்ப்பொய்யைக் கொண்டு தலைவன் தன்காதலியின் அழகுமுதலியவைகளைப்புகழ்வது பொய்பாராட்டலாம். “காதலிநின் முகத்திற்கும் சந்திரனுக்கும் வேற்றுமை அறியமுடியாமல் வானத்திலுள்ள நக்ஷத்திரங்கள் தம் நிலைகுலைந்து கலங்குமே.’’ என்ற கருத்துடைய திருக்குறள் ஒன்று இருக்கின்றது. காந்தியால் அக் “காதலியின் முகம் சந்திரனை முற்றிலும் ஒத்திருப்பதால், மதியுடன் இடைவிடாமல் பழகியுள்ள விண்மீன்களும் இவள் முகம் எது சந்திரன் எது வென வேற்றுமையுணராமல் கலங்கும்’ என்பதில் நக்ஷத்திரம் கலங்கும் என்னும்செய்தி பொய்யே யென்பதை யார்தான் அறியார். இவ்விதமே, மழைக்காலத்தில் மேகம்கருகிக்கருகி மின்னுகின்றதற்குக் காரணம் ஒன்று கற்பிப்பான்போல் நாயகன் ஒருவன் தனது தலைவியை நோக்கிக் ‘காரிகையே, இந்த மேகம் உன் கூந்தலைப்போல் கறுப்பாக முயன்றுமுயன்று பார்த்தும்முடியாமற்போய் வெட்கமுற்றுப் பல்லை இளிப்பதையன்றோ இவ்வுலகத்தார் தம்அறியாமையால் மின்னல் என்றுசொல்கின்றனர்.’’ என அவள் கூந்தலின்கறுமையைவியந்து கொண்டாடினான். மின்னலை மேகத்தின் பல்லிளிப்பு என்றும், கருநிறத்தில் அவள் கூந்தலுக்குத் தோற்றதே அம் மேகம் இளிப்பதற்குக் காரணம் என்றும் சொல்வார் சொன்னாலும் அதை மெய்யோவென்று கணமேனும் நினைக்கத்தான் புகுவார் இங்குயாரே உளர்! ஆதலால் இந்தச் சொற்களால் பொய்யால் விளையும் பயன் உண்டாக வேண்டுமென்று ஒருவரும் கருதியதில்லை. பொய்யே இங்குப் பொய்யாய்விட்டது. இவை போன்ற போலிப்பொய்கள் பாராட்டிக் காதலர் தம் நாயகிகளிடத்தில், (அகப்பொருளிலக்கணத்தில் கூறியுள்ளபடி) சொன்னால்உண்டே யல்லாது, மாவிந்த நகரத்திலே உலக வழக்கத்தில் நாமறிந்தபடி பயன்கருதிய பொய்மொழி யாரும் பேசமாட்டார், என்பது இச்செய்யுளின் பின்னிரண்டு அடிகளது பொருள். இப்பொருள் தருவதற்கு, “மெய்யாகிய நெறியை விட்டு மாந்தரது சொற்கள் விலங்குவன மாளிகை மேற் காரிகையார்கண்ணே காணலாம்’’ எனவருவித்துக்கொள்ளல்வேண்டும். அல்லாது, கண் என்பதை உறுப்பாகிய கண்கள்என்று நினைத்து மாதர்களுடைய கண்கள் மெய்யான நெறியாகிய கற்பினின்று விலகுமெனப் பொருள்கொண்டு மாவிந்தத்தின் மாதருக்கு அபவாதம் தேடிவைப்பது அழகன்று. பின், அதற்கு ஓர் அமைதி வலிந்து முயன்றாலும் பொருந்தாது.



ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கவனிக்க “சுத்வைத்யசாலை” நஞ்சன்கூடு ஏமாற்றீர்
குழந்தைகளுக்கு :
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
“பால சுதா” (Reg.)
அமிர்தாமலகதைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்


புனேட்டட் ஸோல் ஏஜண்டு:
சுன்ஸான், மதுரை.
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.
டிப்போ:
பம்பாய்.
கல்கத்தா.
“நஞ்சன்கூடு பல்பொடி”
சாதாரணம்-பாக்கேட்
பிரான்சு:
மதுரை.
காஞ்சீபுரம்

# அப்பர்

## அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்—29. தருக்கம்

[18-வது பக்கத் தொடர்ச்சி]

### (iii) தருக்கமும் அதன் எல்லையும்

திருநாவுக்கரசுநாயனர் தருக்கத்தின் எல்லையை அடியிற்கண்ட சமணமதக் கண்டனையான பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்:—

ஓர்த்துள்ள வாறு நோக்கி
யுண்மையை யுணராக் குண்டர்
வார்த்தையை மெய்யயேன் றெண்ணி
மயக்கில்வீழ்ந் தழுந்து வேனைப்
பேர்த்தெனை யாளாக் கொண்டு
பிறவிவான் பிணிக ளெல்லாம்
தீர்த்தருள் செய்தார் சேறைச்
செந்நெறி மேவி னாரே.

திருச்சேறை - திருநேரிசை - 2.

ஓர்த்து,*உள்ளவாறு நோக்கிப்பின்னர் உண்மையை உணர்தல் தர்க்கத்தின் பொது நோக்கமாம். ஓர்த்து - நீதியால்† நினைந்து என்றும். அவ்வாறு நினையாதோர்:-

பொய்யாறு வாறே புனைந்து பேசிப்
புலர்ந்தெழுந்த காலைப் பொருளே தேடிக்
கையாறுக் காண முடையோ மென்று
களித்த மனத்தராய்க் கருதி வாழ்வீர்
நெய்யாறு வாடிய நீல கண்டர்
நிமிர்புன் சடைநெற்றிக் கண்ணர் மேய
ஐயாறே யையாறே யென்பீ ராகில்
அல்லல்தீர்ந் தமருலகம் ஆள லாமே.

பல்வகைத் திருத்தாண்டகம் - 3

இப்பாசுரத்தில் தர்க்கநூலின் சாரம் நிறைந்து விளங்குவதைக் காண்க. பொருளைத் தேடுவோர், பொய்யாறுவாறு புனைந்து பேசலாகாது. உள்ளவாறு உண்மையை உணரவேண்டும். உண்மை ஒருவழியும் அவர்களது உணர்ச்சி மற்றொருவழியுமாயு மிருப்பின் யாது பயன்? எப்பொருள் எத்தன்மையதா யிருப்பினும், அப்பொருளின் மெய்ப்பொருளைக் காண்டலே அறிவென்பர் திருவள்ளுவநாயனார். அவ்வாறு செய்யாது நாம் களித்த நமது அந்தக்கரணங்களின் நிலை அறியாமையேயாம். எனவே எப்பொழுதும் உண்மை யென்னும் நாற்பாங்கெல்லையிலே பழகவேண்டுமென்றும். உண்மையையறிவதற்குரிய திறம் ஒருகுழவிக்குயாதும் சுயமாய் வாராது. தந்தை தாய் முதலானோர் உண்மையெனக் கூறியவற்றை நம்பி, அவற்றை யடிப்படையாகக்கொண்டே மேலுமேலும் உலகை யறியவேண்டியிருக்கிறது. இவ்வாறு பெறும் அடிப்படையில் குற்றமிருப்பின், அதை மாற்றல் மிகவும் கடினமான காரியமென, அப்பர் "உண்மை யுணராக்குண்டர் வார்த்தை மெய்யென்றெண்ணி, மயக்கினில் வீழ்ந்து, அழுந்து வேனை" என்றார். சிறுவயதிற் கற்ற பொய் மறக்காமலொருவனை அழுத்துமென்றும்.

நாம் பிறரிடமிருந்து அறிந்த உண்மைகளென்னும் அடிப்படையினின்றே, பூர்வபட்சம் சித்தாந்தமாகப் புத்திவளர ஆரம்பிக்கின்றது. இதற்காகநமது முன்னோர் தர்க்கநூல் மாணவனுக்குப் பொருள் அல்லது பதார்த்தமாவது யாவது எத்தகையது என்பதைஉணர்த்திப் பின்னரே, அப் பதார்த்தங்களைப் பற்றிய பூர்வபட்சம் சித்தாந்தம் நிகழ்த்தநேரும். சிறு குழந்தைகளுக்குக் கட்டுகதைகள் சொல்லும்போதும், அதைக் கிரஹித்து அறிய, முன்னர் அறிந்த உண்மையென்னும் அடிப்படையின்றி இயலாதாகையால், உண்மையின் சம்பந்தமின்றி யாதொருவிஷயமும் ஆரம்பம்செய்ய இயலாது. பொய்மொழிவதற்கும் மெய்யின் சம்பந்தம் வேண்டியதென்பது திண்ணம். ஒவ்வொரு விஷய முடிவும் அதனால் மெய்யையே பற்றி நிற்கும். பொய் யென்பது மெய்யென்னும் மண்டலத்தின் அசுத்தம், அல்லது தோஷமேயன்றி, அது தனக்கென்று ஒரு மண்டலம்பெறச் சக்தியற்றதும் யோக்கியதையில்லாததுமாம். அது உபசார வழக்கில் இருளென்னும் * பொருள்போன்றது. எனவே பதார்த்தங்களும், அவைகளின் குணங்களுமே நமது உலகஅறிவை விருத்தி செய்வனவாகும். குணம் என்பதில், காலம், இடம், தொழில் முதலியனவு மடங்கும். இவ்வெல்லையின் கண்ணே தர்க்கநூல் தனது முறைநளான பாதைகளை ஒழுங்காய் அமைக்கும். இதன் விவரத்தைப் பின்னர்க் காண்போம்.

### (iv) பதார்த்தமும் குணமும்

ஒரு பொருள் அல்லது பதார்த்தத்தை நிச்சயிக்க நமக்கு உதவிசெய்வது அதன் குணமே யாம். வெண்மையான பொருளொன்றை நாம் காண்கின்றபோது, அது பாலா, அல்லது சுண்ணும்பா, வேறு யாதேனும் ஒருவகை மருந்தா அல்லது பஞ்சாஎன்று ஐயுறுவோமாயின், நமக்கு இதற்கு முன்னரே பெற்றுள்ள அறிவின் உண்மைகளைக்கொண்டு ஆராய்ந்து(சுண்ணமாயின்) மஞ்சளைச் சிவக்கச் செய்கின்றபடியினால் இதுசுண்ணும்பு என்று அநுமானிக்கின்றோம். பிறகு வெண்ணிறம் பெற்ற ஏனைய பொருளின் குணம் இதனிடையிராததால், அப்பொருள்கள் அல்லவென்றும் துணிகின்றோம். இவ்வாறு நாம் பரிசோதனை செய்து முடிவுக்கு வந்த முடிவே ஒரு வாக்கியமாகும். ஒவ்வொரு வாக்கியத்தின் பின்னும் ஒருவகை யாராய்ச்சியின்முடிவு தொக்கிநிற்கும். சிலசமயத்தில் அது வெளிப்படையாயும் காணப்படும்; சில சமயங்களில் மிகவும் சூக்குமமாய்க் காணப்படாமலும் நிற்கும். எனினும் எந்தவொரு வாக்கியமும் யாதாமொரு ஆராய்ச்சியின் முடிவாகத்தான் இருக்கவேண்டும். அஃது அன்றென்று கூறல் ஏலாது. எனவே ஆராய்ச்சியில் நிலைக்கும் ஒவ்வொரு முடிவும், ஒரு பதார்த்தத்தின் குணமாகவே பின்னர் விளங்குமென்பது மனோசாஸ்திர வல்லுநர்கள் கொள்கையாம். ஆகையால் குணங்களின் ஆராய்ச்சியே ஒரு பதார்த்த நிச்சயத்தின் ஆராய்ச்சி எனல் வேண்டும். இதனைத் திருநாவுக்கரசு,

இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி
யிடர்ப்பாவங் கெடுத்தேழை யேனையுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை யாதிமா தவத்து ளானை
யாறங்க நால்வேதத் தப்பா னின்ற
பொருளானைப் புள்ளிருக்கும் வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே.

திருப்புள்ளிருக்கும் வேளூர்—திருத்தாண்டகம் 4.

என்னும் பாசுரத்தில் குறிப்பது காண்க.

குணங்களின் ஆராய்ச்சியைச் செவ்வனே செய்தோமென்று செப்புதற்கு எக்காலத்திலும் இயலாதாயினும், கூடியவரையிற்செய்து ஒருமுடிவிற்குவந்து அம்முடிவினின்று மேல் நடவடிக்கைகளாம் முடிவுகளுக்குச்செல்கின்றோம். ஆயினும் எல்லா விஷயங்களிலும் உலக வழக்கில் "ஒன்று பாதி' என்று சொல்லும் தீர்மானம் பயன்படாததலால், சற்று நிதானித்துக் கசடற்ற முடிவிற்கு வரவேண்டுவது மிகவும் அவசியம். அவ்வாராய்ச்சிக்குத்தக்க சிலகருவிகளைத் தர்க்கநூல் தரும். தந்த அவற்றையும் சரியாய் உபயோகிப்பதிலேயே ஒருவனுடைய தன்மை தோன்றும்.

எப்பதார்த்தங்களையும் ஆராய்ச்சி செய்யுங்கால் அவைகள்தாம் அவ்வவற்றின் பற்பல குணங்களின் சையோக அநுபவமே யன்றி வேறில்லை என்பது தெரியவரும். உணர்ச்சிக்குரிய அறிவு ஏறஏற, உலகப் பொருட் காட்சிகளே மாறிவிடும். உலகத்திலுள்ள சீவர்கள் தங்களுக்குள்ள புலன்களாலே ஐந்து வகையாவர். இவர்களில் ஐயறிவுடைய சீவர்களிற் சிலர் மனமென்னும் அந்தக்கரண விளக்கத்தால் ஆறறிவுடையோராவர். பண்டைக் காலத்தில் நமது முன்னோர் செவ்வனே அறிந்த விஷயம் இது—தொல்காப்பியனார்,

ஒறறி வதுவே யுற்றறி வதுவே
யிரண்டறி வதுவே யதொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
யைந்தறி வதுவே யவற்றொடு செவியே
யாறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

பொருளதிகாரம்-தொல்காப்பியம்.

என்றனர். எனவே உணரும் புலன்கள் அதிகரிக்க அதிகரிக்க, திரிசயமான உலகமும், குணங்கள் அதிகரித்துக்காணப்படுவதுமன்றித் தோற்றமும் அநுபவமுமே முன்னறிந்ததற்கு ஒப்பிடக்கூடாத அளவையில் மாறுமென்பது திண்ணம். ஒளியறிவற்ற சீவனுக்கு ஒளியைப் போதித்தலும், செவிப்புலனற்ற ஜீவனுக்குச் சங்கீத இனிமைபோதிப்பதும் எவ்வாறு?

ஆகையால், பிரபஞ்ச உற்பத்தியில் முதலில் உலகவறிவில் மிகவும் குறைந்த அறிவான பரிச உணர்வு ஏற்பட்ட பின்னரே, ஏனையஉணர்வுகள் ஏற்படஆரம்பிக்கும். புல்லும் மரமும் ஓரறிவுடையன என்று நம் முன்னோர் கொண்டனர். தாவர தத்துவத்திலிருந்து ஜங்கம தத்துவங்கள் உண்டாக மண்ணிற் பிறந்தவை மண்ணின் குணத்துடன் நில்லாமல் நீரின் குணத்தைப்பெற விரும்பியும், தீயின் குணம் ஏற்கவும், காற்றின் தன்மை வகிக்கவும், ஆகாயத்தில் சம்பந்தப்படவும் விருத்தி நிகழ்கின்றதன்றோ? இதனைத் திருமழிசையாழ்வார், பஞ்ச பூதங்களில் நிற்கும் கடவுள் தத்துவத்தைக் காட்டுவதில் நோக்குக:—

பூநிலாய வைந்துமாய்ப் புனற்கணின்ற நான்குமாய்த்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகா லிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ணநின்னை யார்நினைக்க வல்லரே.

திருச்சந்த விருத்தம் - 1.

இவ்வாறு பஞ்சபூதங்களின் தன்மைக்குச் சம்பந்தப்பட்ட உயிர்கள் மேலுமேலும் அறிவை வளர்ப்பதே விருத்தி .அல்லது, ஆங்கில முறையில்,Evolution என்று கூறப்படும். அவ்விருத்திக்கு ஏற்றவாறே பதார்த்தங்களின் குணங்களையும் ஆராய இயலும். அவை உலகவழக்கில் ஆராயக்கூடியவைகளென்றும் சமாதிநிலையில்ஆராயக்கூடியனவென்றும்பேதப்படும். அப்பர்வகுக்கும் குணங்களின்பகுதிகளைநோக்குக:—

பிரியாத குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்றாய்
விரியாத குணமொரு நான்கே யென்பர்
விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பர்
தெரிவாய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும்
பதமஞ்சுங் கதியஞ்சும் செப்பி னாரும்
எரியாய தாமரைமே லியங்கி னாரும்
இடைமருது மேவிய வீச னாரே.

திருவிடை மருதூர் - திருத்தாண்டகம் - 7.

* ஓராதா நுள்ளத்தி னில்லார் தாமே
யுள்ளூறு மன்பர் மனத்தார் தாமே
பேராதென் சிந்தை யிருந்தார் தாமே
பிறர்க்கென்றுங் காட்சிக் கரியர் தாமே
யூராரு மூவுலகத் துள்ளார் தாமே
யுலகை நடுங்காமற் காப்பார் தாமே
பாரார் முழவத் திடையார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே.

திருப்பழனம் - திருத்தாண்டகம்-8

† நீதியால் நினைசெய் நெஞ்சே நிமலனை நித்த மாகப்
பாதியா முமைத னோடும் பாகமாய் நின்ற வெந்தை
சோதியாய்ச் சுடர்வி ளக்காய்ச் சுண்ணவெண் ணீற தாடி
ஆதியு மீறு மானா ரதிகைவீ ரட்ட னாரே.

திருவதிகை வீரட்டானம் - திருநேரிசை - 7

* அருளா லெவையும்பா ரென்றான்—அத்தை
யறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால்—கண்ட
என்னையுங் கண்டில னென்னடி தோழீ!

சங்கர - சங்கர - சம்பு

—தாயுமானவர்



வந்துவிட்டது! கமலவல்லி அல்லது டாக்டர் சந்திரசேகரன் வந்துவிட்டது!!
ஓர் இனிய செந்தமிழ் நாவல். தமிழ் நாட்டு நாடக மேடையிலும் படக்காட்சிச்சாலைகளிலும் நடித்துப் பேர்பெறும் ஸ்ரீமதி T. P. இராஜலக்ஷிமி அவர்களால் இயற்றப்பட்டது.
சித்திரப் படங்கள் நிறைந்த இந்நாவலின் அருமையை இதன் அட்டவணையால் அறிக.
(1) காட்டேறியும் கறுப்பண்ணசாமியும், (2) சுவர்க்கவாசலும் அம்பிகைச் சேவையும், (3) பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம், (4) பள்ளியறையின்பரிதாபம், (5) கண்ணப்பன்கவலை, (6) கடிதக் குறிப்புகள், (7) துன்பத்தின்மேல் துன்பம், (8)உயிரைக்காத்த உத்தமர்கள், (9) பழைய நண்பர்கள், (10)விருப்பும் வெறுப்பும், (11) அன்னநடை ஆரணங்கு, (12)நெட்டையனுக்கேற்ற குட்டையன், (13) விரும்பியவாறு விட்டுக்கொடுத்தல், (14) விடாக்குண்டன், (15) மங்கையருக்குகந்தமணவாளர்கள், (16) ஆனந்த வாழ்வு.
நிறைந்த விஷயம்! உடனே எழுதுங்கள். இதன் விலை ரூபாய் ஒன்றே குறைந்த விலை!
V. S. T. சாமி அண்டு கம்பெனி, வேப்பேரி, மதராஸ்.

## குன்றுடையானும் மக்களும்

[9-வது பக்கத் தொடர்ச்சி]

2. குன்றுடையான் பங்காளிகளிடத்தில் அவதிப் பட்டது.

பங்காளிகள் உச்சிவேளையில் பாய்ச்சலூரை யடைந்து, தாங்கள் கொண்டுவந்த சொத்தையும்ஆடுமாடுகளையும் பன்னிரண்டு பாகங்களாகப் பிரித்து ஆளுக்கொரு பங்கு எடுத்துக்கொண்டார்கள். சாப்பாடு முடிந்தபின் அவர்கள் தங்கள் மனைவியர்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு குன்றுடையானை யாது செய்வதென்று யோசித்தார்கள்.

‘செய்வதென்ன? கிடக்கின்றான் அவன்பாட்டில். மாடு எருமைமேய்த்துக்கொண்டுவந்தால் ஒருவேளை சாப்பாடுபோடுவது போதும்'' என்றான் ஒருவன்.

‘தகப்பன் இறந்ததும் பங்காளிகள் சொத்தைப் பகிர்ந்துகொண்டு பையன்வாயில் மண்ணைப்போட்டார்கள் என்று உலகம் ஏசும்; ஆகையினால் கொஞ்ச காலம் பையனை மரியாதையாகவே நடத்தவேண்டும்'' என்றான் மற்றொருவன்.

‘பையனோ அப்பாவி, ஒன்றும் அறியாதவன்; தலையிலடித்தாலும் வாய் திறக்கமாட்டான். ஏதோ ஊற்றினதைக் குடித்துக்கொண்டுகிடக்கிறான். இப்பொழுது வேலை வெட்டி யொன்றுஞ் செய்யவிடவேண்டாம். அவன் இஷ்டம் போலவே விளையாடித் திரியட்டும். அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்', என்றான் இன்னுமொருவன்.

இவ்வாறாகக் கணவர்கள் தங்களுக்குத் தோன்றியதைச் சொல்லிக்கொண்டிருக்கையில் மனைவியர்களும் குறுக்கிட்டுப் பேசத் தொடங்கினார்கள்.

‘பையன் எங்கேயோ இருக்கட்டும், என்வீட்டில் மாத்திரம் வேண்டாமடி யம்மா. எடுக்கிற பிள்ளை நடக்கிற பிள்ளையை வைத்துக்கொண்டு இவனுக்கு இழவெடுக்க என்னால் முடியாது' என்றாள் ஒருத்தி.

‘காட்டுவேலை வீட்டுவேலை செய்து கைகால் ஓய்ந்து சத்துக்கெட்டுக் கிடக்கிறேன் நான். போதாக்குறைக்கு இவனையும் வைத்துக்கொண்டு மாரடிக்க யாரால் ஆகும்? வேணுமென்கிறவள் வைத்துக்கொள்ளட்டும். எனக்கு வேண்டாமடி, அம்மா' என்றாள் மற்றொருத்தி.

‘ஏனடி, சும்மா வார்க்கிறாயா ? அவன் பணத்தைப் பங்குபோட்டுக்கொள்ள நான் நீ யென்று வரலாம். அவனைக் காப்பாற்றுகிறதென்றால் கசக்கிறதோ ?' என்றாள் மற்றொருத்தி.

பின்பு கவுண்டர்கள் கூடி ஆலோசித்து வீட்டுக்கு ஒருவருடம் பையன் சாப்பிடவேண்டுமென்று முடிவு செய்து, தங்கள் மனைவிகளுக்கு நல்ல வார்த்தைகள் சொல்லி அவர்களையும் இணங்கச் செய்தார்கள். அவ்வாறே, மறுநாள்முதல் குன்றுடையான், ஒவ்வொருவன் வீட்டிலும் ஒவ்வொரு வருடகாலம் சாப்பிட்டுக் களித்துத் திரிந்தான்.

பன்னிரண்டாம் ஆண்டு பங்காளிகளில் இளையவனாகிய காளிங்கராய கவுண்டன் வீட்டில் முடிவு பெற்றது. பதின்மூன்றாம் ஆண்டு முதல்நாள் குன்றுடையான் சாப்பாட்டிற்கு வந்தபொழுது ஏனென்று கேட்பார் ஒருவரும் இல்லை. தனக்குச்சோறுபோடும்படி அவன் அண்ணியை அழைத்தலும், அவள், ‘நான் சோறுபோடவேண்டிய காலம் நேற்றோடே கழிந்தது. இனி உனக்கு நான் சோறு போடமாட்டேன்' என்றாள்.

‘ஆனால், நான் சோற்றுக்கு என்ன செய்வேன் ?' என்றான் கண்ணில் நீர்வடியக் குன்றுடையான்.

‘என்ன செய்து எக்கேடு கெட்டுப் போவாயோ, எனக்கென்ன தெரியும் ? இந்த ஒரு வருஷமாக உன்னை உட்காரவைத்துக்கொண்டு அழுதது போதும். காலமெல்லாம் உன்னைக் கட்டிக்கொண்டு அழ வேண்டும் என்று எனக்குத் தலையெழுத்தா ? ஏன் ? பெரியண்ணன் வீட்டுக்குப்போய்ச் சோறுபோடச் சொல். நான்மாத்திரமாவாங்கி மூட்டைகட்டிக்கொண்டேன்? என்றாள்.

குன்றுடையானுக்கு மறுமொழி சொல்ல நாவெழவில்லை. பசியாலும் துக்கத்தாலும் சோர்ந்து ஒரு மூலையில் உட்கார்ந்து தலைகவிழ்த்துத் தாய்தந்தையர்களை நினைந்து எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினான்.

இளையவன் மனைவி போட்ட இறைச்சலைக்கேட்டு மற்றைய பங்காளிகளின் மனைவியர்களும் அங்குவந்து கூடினார்கள்.

‘முழு ஆள் ஆகியும் இன்னும் உட்கார்ந்துகொண்டு சாப்பிடலாம் என்றா பார்க்கிறாய் ? வெட்கமில்லையா ?' என்று முகத்திலிடிப்பவள்போற் கேட்டாள் ஒருத்தி.

‘ஆமாம் ஐயனைக் காலமெல்லாம் உட்கார வைத்துக்கொண்டு பூசை பண்ணுவார்கள் ! அங்கிருந்து கொண்டுவந்ததற்கும் இந்தப் பன்னிரண்டு வருஷம் இங்கிருந்துகொண்டு சாப்பிட்டதற்கும் கணக்குப் பார்த்தாலல்லவா தெரியும் ? ஏதோ, போனாற்போகிறது என்று பார்த்தால் தலைகீழாக விழுகிறான் தம்பி'' என்றாள் காரியுமிழ்பவள்போல் மற்றொருத்தி.

‘ஐயோ ! காராள வமிசத்தில் பிறந்தும் உட்கார்ந்துகொண்டு தின்னலாமா! இதுகூடத் தெரியவில்லையே அம்மா, இந்தப் பிணத்திற்கு!' என்றாள் மற்றொருத்தி.

மற்றொருத்தி விரைந்துவந்து முன்னே நின்று, ஏனக்கா, இந்தப் பேச்செல்லாம் எதற்கு ? இனிமேல் வேலைசெய்தால் சோறு, செய்யாவிட்டால் இல்லையென்று ஒருவார்த்தையில் முடிப்பதைவிட்டுவிட்டுச் சும்மா ஏன் பேசுகிறீர்கள் ?' என்றாள்.

‘நன்றாய்ச் சொன்னாயடி.. இனிமேல் நாயலைகிறது போல் பாடுபட்டாலல்லாமல் கஞ்சியைக் கண்ணால் பார்க்க முடியாது', என்றாள் கறுத்த முகத்துடன் ஒருத்தி.

‘வேலை செய்யாமற்போனால் ஓடெடுத்துக்கொண்டு போகிறான்' என்றாள் அவர்களில் இளகிய நெஞ்சுடையாள் ஒருத்தி.

‘ஆமாம். இவன் ஓடு எடுத்துக்கொண்டு போனால், இந்த மூஞ்சியைக் கண்டாலே தோண்டுவார்கள்' என்றாள் கடிப்பாள்போல் மற்றொருத்தி.



இவ்வாறாகக்கவுண்டச்சிகள் ஒவ்வொருவரும்குன்றுடையானை ஒவ்வொன்றுசொல்லிக்கொண்டிருக்கையில், காடு கரை போயிருந்த கவுண்டர்கள் மத்தியானம் வீடுவந்து சேர்ந்து, முகஞ்சோர உட்கார்ந்திருக்கும் தம்பியைப் பார்த்து, “ஏனெப்பா, ஒரு விதமாய் முகத்தைச் சுழித்துக்கொண்டிருக்கிறாய?' என்று கேட்டார்கள். சோறுபோடச்சொன்னேன் நேற்றோடே தான் சோறுபோடவேண்டிய காலங்கழிந்ததென்று சொன்னாள் சின்ன நங்கை. மற்றை நங்கைமார்கள் கூடிக்கொண்டு என்னை வாய்க்குவந்தபடி திட்டுகிறார்கள்' என்றான் தம்பி.

அண்ணன்மார்கள் இதைக்கேட்டு ஒருவர்முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டு நிற்கையில், மனைவியர்கள் ஓடிவந்து, ‘ஆமாம், உங்களுக்குப் பிழைப்பென்ன? உங்கள் தம்பிக்குப் பிழைப்பென்ன? காராள வமிசத்தில் பிறந்து உட்கார்ந்துகொண்டு சாப்பிடலாமா?-என்றுகேட்டதற்குக் கனகோபம் வந்து விட்டது தம்பிக்கு. இனி உங்கள் தம்பியை வீட்டில்வைத்துக்கொண்டு குடித்தனம்பண்ண எங்களால் முடியாது. ஒன்றோ உங்கள் தம்பி வீட்டைவிட்டு வெளியேற வேண்டும்; அல்லது நாங்கள் வெளியேறவேண்டும். நாங்கள் போகிறோம் எங்கள் தாய்வீட்டுக்கு. நீங்களே சமைத்துப்போடுங்கள் உங்கள் தம்பிக்கு' என்று கடிந்துசொல்லி எட்டி நடந்தார்கள்.

கவுண்டர்கள் மனைவியரை இழக்கஅஞ்சி அவர்களுக்குத் தக்க சமாதானஞ்சொல்லி யழைத்துவந்தார்கள். அப்பொழுது பங்காளிகளில் மூத்தவன் அப்பெண்டிரை நோக்கி, ‘ஆமடி, பெண்டுகாள், குன்றுடையானை என்னசெய்யச் சொல்லுகிறீர்கள்? உங்கள் யோசனையைத்தான் சொல்லுங்களடி, பார்ப்போம். உங்கள் மனசுபோலவே தம்பியை நடக்கச்சொல்லுகிறோம்' என்றான்.

அதுகேட்ட மனைவியர்கள், ‘காலையில் எழுந்திருந்து வீட்டுக்கு இரண்டுகுடமாகப் பன்னிரண்டு வீட்டுக்கும் இருபத்துநான்குகுடம்நிறையத்தண்ணீர் கொண்டுவந்து கொட்டவேண்டும். சொன்னவேலை செய்து பழையது குடிக்கவேண்டும். பின்பு பன்னிரண்டு வீட்டு மாடுகளையும் ஓட்டிக்கொண்டுபோய் மலைக்காட்டில் மேய்த்து வரவேண்டும். பின்பு நாய்களுக்கு அம்பலி காய்ச்சப் பன்னிரண்டு படி கேழ்வரகு நெரிக்கவேண்டும். பட்டிக்கு நாய்ச்சோறு கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். இப்படிச் செய்தால்மாத்திரம் சோறுபோடுவோம், இல்லாவிட்டால் இல்லை'' என்றார்கள்.

அண்ணன்மார் தம்பியை நோக்கி, ‘தம்பி, உன் நங்கையர்கள் சொல்வதும் ஒரு நல்ல உபாயந்தான். நீயோ வயசுப்பிள்ளை யாய்விட்டாய். இனிமேல் சும்மா இருந்துகொண்டு சாப்பிடுவது ஒழுங்கன்று. விளையாடுவதுபோல் நீ இந்த வேலைகளைச் செய்துவிட்டுச் சுகமாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருக்கலாம். உனக்கு ஒன்றும் குறைவில்லை' என்றனர்.

‘ஆகட்டும், நீங்கள் சொல்கிறபடியே செய்கிறேன்' என்றான் தம்பி.

மறுநாள்முதல் குன்றுடையான் அண்ணியரிட்ட வேலைகளைச்செய்து, பழையது குடித்து, மாடு ஓட்டிக்கொண்டுபோய்ப் பாய்ச்சலூருக்கு நான்குநாழிகை தூரத்திலுள்ள மலைக்காட்டில் மேய்த்து, மாலைநேரத்தில் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுவந்து கட்டி, பட்டிக்கு நாய்ச்சோறு சுமந்தான்.

இவ்வாறு ஒரு வருடங் கழிந்தது.

## கந்தபுராணமும் சங்க நூல்களும்.

[10-வது பக்கத் தொடர்ச்சி]

இனிச் ‘சிவன்பொரு ணிறுக்குமாற்ற லுருத்திர சருமனாகி யுற்றிடு நிமலன்' என்பதிலடங்கியுள்ள வரலாற்றை ‘இறையகனா ரகப்பொருள்' என்னும் நூலிலுள்ளவாறே யீண்டுத் தருகின்றாம். அது வருமாறு- ‘அக் காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்ல, பசி கடுகுதலும், அரசன் சிட்டரை யெல்லாங் கூவி, ‘ வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என்தேயம் பெரிதும் வருந்துகின்றது ; நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு நாடு நாடாயின ஞான்று என்னையுள்ளி வம்மின்'' என்றான். என, அரசனைவிடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக்கவன்று, “என்னை ? எழுத்துஞ்சொல்லு மாராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே ! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்'' எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக்கடவுள் சிந்திப்பான். “என்னை பாவம் ! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று, அதுதானும் ஞானத்திடையதாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம்'' என்று, இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின்கீ ழிட்டான்.

இட்ட பிற்றைஞான்று, தேவர்குலம் வழிபடுவான் தேவர்கோட்டத்தை எங்குந்துடைத்து, நீர்தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின்கீழ்ப் பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக்குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ் போந்தன. போதரக் கொண்டுபோந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப், பார்ப்பான் சிந்திப்பான் ; “அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றா னென்பதுபட்டுச் செல்லா நின்றதுணர்ந்து எம்பெருமான் அருளிச்செய்தானாகும்'' என்று, தன் அகம் புகாதே கோயிற்றலைக்கடைச் சென்று நின்று கடைக்காப்பார்க் குணர்த்தக் கடைக்காப்பார் அரசர்க் குணர்த்த, அரசன் புகுதருகவென்று பார்ப்பானைக் கூவச் சென்று புக்குக் காட்டக் கொண்டு நோக்கி, ‘இது பொருளதிகாரம் ! நம

பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்தானாகற்பாலது" என்று அத் திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று சங்கத்தாரைக் கூவுவித்து, "நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டு போய்ப் பொருள்காண்" என, அவர்கள் அதனைக் கொண்டுபோந்து கன்மாப்பலகை யேறியிருந் தாராய்வுழி, எல்லாருந் தாந்தாம் உரைத்த உரையே நன்றென்று சிலநாளெல்லாஞ் சென்றன. செல்ல, நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச்சென்று நமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும் என்று கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப் பட்டது அன்றாயொழியக்காண்டுமென, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார். செல்ல, அரசனும் எதிர் எழுந்துசென்று, "என்னை? நூற்குப் பொருள் கண்டீரோ? என, "அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்" எனப், "போமின், நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று. நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையினின்றே," என்று அரசன் சொல்லப் போந்து பின்னையும் கன்மாப் பலகை யேறியிருந்து "அரசனும் இது சொல்லினான், யாங் காரணிகனைப் பெறுமாறு என்னைகொலென்று சிந்தித்திருப்புழிச், சூத்திரஞ் செய்தான் ஆலவாயிலவிர்சடைக் கடவுளன்றே! அவனையே காரணிகனையுந் தரல்வேண்டுமென்று சென்று வரங்கிடத்தும்" என்று சென்று வரங்கிடப்ப, இடையாமத்து, "இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனென்பான் பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப் பிள்ளையுளன்; அவனை அன்னனென்றிகழாது கொண்டுபோந்து ஆசன மேலிரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்ட விடத்து; மெய்யல்லா உரைகேட்ட விடத்து வாளா இருக்கும்; அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினாற்றோன்றினான்' எனமுக்காலிசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர்குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரி குடிகிழாருழைச் சங்கமெல்லாஞ் சென்று, இவ்வார்த்தையெல்லாஞ் சொல்லி ஐயனாவான் உருத்திரசன்மனைத் தரல்வேண்டுமென்று வேண்டிக்கொடுபோந்து வெளியதுடீஇ, வெண்பூச் சூட்டி, வெண்சாந்தணிந்து, கன்மாப் பலகையேற்றி இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப எல்லாரும் முறையே உரைப்பக்கேட்டு வாளா இருந்து மதுரை மருதனிளநாகனார் உரைத்த விடத்துப் பதந்தொறுங் கண்ணீர் வார்த்து மெய்ம்மயிர் நிறுத்திப் பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்தவிடத்துப் பதந்தொறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து மெய்யுரை பெற்றாம் இந்நூற்கென்றார்.

அதனால், உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனாவான் செய்தது இந்நூற் குறையென்பாருமுளர்; அவர் செய்திலர், மெய்யுரை கேட்டாரென்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு, குமார சுவாமியாற் கேட்கப்பட்டதென்க.'

மேற்கூறப்பட்ட வரலாற்று விவரத்தால் 'இறையனாகப்பொருள்' என்னும் நூலின் செய்திகள் யாவும் நன்கு விளங்குவனவற்றைக் காணலாம்.

> உலகிய னிறுத்தும் பொருள்மர பொடுங்க
> மாறனும் புலவரு மயங்குறு காலை
> முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கால்
> அன்பினைந் திணையென் றறுபது சூத்திரங்
> கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற்
> பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத்
> தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்'

[உலகத்தில் இலக்கணமாக நிறுத்தும் பொருட்கூறு ஒரு பஞ்சத்திலிறத்தலால், பாண்டியனும் கடைச்சங்கத்தாரும், (எழுத்தும் சொல்லும் உண்டாய்ப் பொருட்கூறின்றி) மயங்குதலுற்ற காலத்து, கடலமுதத்தைத் திரட்டியெடுத்துக் கரையில் வைத்தாற்போல, எல்லா நூற்கு முந்திய பல மறைதோற்றிய வாக்கினால் பரப்பினையுடைய பொருட்சுவைத் தமிழை, 'அன்பினைந்திணை' யெனத் தொடங்கி, அறுபது சூத்திரமாகத் தொகுத்து, பாண்டியனுக்கும் கடைச்சங்கத்தாருக்கும் அந்தத் தென்றமிழைத் தெளியக் கொடுத்தருளின கடவுள்.]

எனக் கல்லாடத்து இவ்வரியசெய்தி நன்கு கூறப்பட்டிருத்தல், இதனுண்மையை யினிது விளக்கத்தக்க சான்றாகும்.

தவராஜ சிங்கமாகிய அருணகிரிநாத சுவாமிகள் தாமியற்றிய திருப்புகழில்,

> சடிலத் தவனிட் டவிசிட் டகுலத்
> தொருசெட் டியிடத் தினுதித் தருள்வித்
> தகருத் ரசன்மப் பெயர்செப் பியிடப் பரிவாலே
> சநகர்க் குமகஸ்த் யபுலஸ்த் யசநற்
> குமரர்க் குமநுக் ரகமெய்ப் பலகைச்
> சதுபத் துநவப் புலவர்க் கும்விபத் தியில்ஞான
> படலத் துறலக் கணலக் யதமிழ்த்
> த்ரயமத் திலகப் பொருள்வ்ருத் தியினைப்
> பழுதற் றுணர்வித் தருள்வித் தகசற் குருநாதா!

என, இவ்வரலாற்றுவிவரம் ஒருபுடை யொத்துவருமாறு சொல்லியுள்ளார்.

> ஏராரு மாட கூட மதுரையில்
> மீதேறி மாறி யாடு மிறையவர்
> ஏழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம்
> ஈடாய ஊமர் போல வணிகரி
> லூடாடி ஆல வாயில் விதிசெய்த
> லீலாவி சார தீர வரதா குருநாதா'

என, திருவிராலிமலைத் திருப்புகழிலும் இவ்வரலாற்று விவரம் வருதல் காணத்தக்கதாம்.

*——————*



# மானத சாத்திரம்

## [ PSYCHOLOGY ]

[4-வது வால்யூம், 635-வது பக்கத் தொடர்ச்சி]

### (Meaning) குறிப்பு.

மாடு என்று சொல்கின்றேன்; இச்சொல் எதனைக் குறிக்கின்றது; அதன் பொருள் யாது? சொல்வான் குறிப்பு யாது? இவ்வாறுபோலவே, மஞ்சளாகவும் வட்டமாகவும் ஒன்றைக் காண்கிறேன். இப்புலக்காட்சி எதனைக் குறிக்கின்றது; இப்புலனின் பொருள் என்ன? பொற்காசு என்று கூறுகின்றேன். மஞ்சள் நிறம், வட்ட வடிவு, முதலிய புலன்கள், எவ்வாறு இப் பொருட்குறிப் புடையனவாக விளங்குகின்றன. வெண் பளிங்குத்துகள் போன்ற வெண்பொடி என் கண்முன் புலனாகின்றது; கன்னற் பொடி என்ற குறிப்பு அப் புலக்காட்சியால் எழுவது எங்ஙனம்? நாவில் நீரூறுகின்றது. இனியபொருள் என்று எதிர்பார்க்கின்றேன். அதனைப் பெறுதற்குக் கையை நான் நீட்டுகின்றேன். தோன்றுவது என்ன? வெண்ணிறமும், பொடிவடிவமுமே? குறிக்கப்படுவதோ இனிப்புடையதாய் நம்மால் விரும்பி யுண்ணப்படும் பொருள். குறிப்பென்பதுதான் யாது? விரும்புதல், நீரூறுதல், கை நீட்டல் முதலியனவும் பிறவும், நமது தசைநார்களின் கிளர்ச்சியே யாதலின், தசைநார்களின் கிளர்ச்சியே அக் குறிப்பாகும் என்று நடத்தைக்கொள்கையினர் மன்றாடுகின்றனர். வேறுசிலரோ, புலன்கள் கருத்துப்புலன்களாகவும் காட்சிப்புலன்களாகவும் எழுகின்றனவன்றோ? என்னெதிரில் இல்லாமல் வெளியூர் சென்றிருக்கும் எனது நண்பனுடைய வடிவத்தை இப்போது எண்ணுகின்றேன். அது கருத்துப்புலனே யன்றிக் காட்சிப்புலன் அன்று; அங்ஙனமே, வெண்பொடிக் குவியலைக் கண்டபோது, காட்சிப் புலனாகும் வெண்ணிறத்தோடு, இனிமை முதலியன கருத்துப்புலனாக எழுகின்றன. இவ்வாறு கருத்துப் புலனாக எழுவனவே அக் காட்சிப்புலனால் குறிக்கப்படுவனவாம். அவையே அதன் பொருட் குறிப்பாகும், என்பார்.

ஜேம்ஸ் என்ற பெரியார் பொருட்குறிப்பினைப் பின்வருமாறு விளக்கிவைக்கின்றனர். நமது நனவு நிலையானது, தொடர்ந்தோடும் ஓர் ஓடை போன்றுளது; இவ்வோடையிலே இறங்கிக் குளிப்பதற்குப் பல துறைகள் இருக்கின்றன; வீட்டுத்துறை வேலைத்துறை, என்று பல துறைகளிலும் ஒவ்வொருவரும் ஈடுபடுகின்றோமன்றோ; ஒவ்வொரு துறையிலும் யாதேனும் ஒரு பொருள் சிறந்து தோன்றுகின்றது; இளமையில் வீட்டுத்துறையில் தாயே தனியரசு செலுத்துகிறாள்; வீடு என்று எண்ணியபோதெல்லாம் அவள்நினைவு வருகின்றது; சிறிதுநாட்கள் சென்றதும் அக்கோட்டையைத் தந்தையார் கைப்பற்றிக்கொள்கின்றார்; காளையானபோது மனைவி குடிபுகுந்து வீற்றிருக்கின்றாள்; மக்களைப் பெற்றபின் மக்களே இளவரசுபட்டம் கட்டிக்கொண்டு பேரரசு செலுத்துகின்றனர்; இவ்வாறு ஒவ்வொரு பொருள் சிறந்து விளங்கும்போது, அத்துறையில் உள்ள மற்றைய பொருள்கள் அதனைச் சுற்றிலும் விளக்கம் குறைந்தும் நிறைந்தும் பலபடியாக விளங்குகின்றன; தாய் வீற்றிருக்கும்போது தந்தை தம்பி முதலானோருடைய எண்ணங்கள் தாயை முன்னிட்டு எழுவனவாய் விளக்கம் குறைந்து திகழ்தல் காண்க. ஒரு குளத்தின் நடுவே கல்லொன்றை வீசி எறிகின்றேன். அது வீழ்ந்த இடத்தினின்றும் அலைவளையங்கள் புறப்பட்டு, அகன்றுகொண்டே வந்து அந்தக் குளத்தின் எல்லைப்புறத்திலே முடிகின்றன. நடுவே எழும் அலைவளையம் விளக்கமாகவும் தெளிவாகவும் திரண்டவடிவாகவும் விளங்குகின்றது. எல்லைப்புறத்தை அடைய அடையத் திரட்சி குறைந்து வலிவும் குறைந்து விளக்கமுங் குறைகின்றது. அஃதேபோல, நனவோடையில் ஒவ்வோர் துறையிலும் நடுவே வீற்றிருப்பன விளக்கம்நிறைந்தும், எல்லைப்புறத்திலுள்ளன விளக்கம் குறைந்தும் திகழ்கின்றன. மஞ்சள் என்ற பொருளை, குளிக்கும் பெண்ணொருத்தி எண்ணும்போது அவள் எதிரில் உள்ள அரைத்த மஞ்சட் குழம்பே அவளது மனத்தில் சிறந்து திகழ்கின்றது. அதனைச் சுற்றி அதன் நிறம் மணம் அதன் கிழங்கு நிலை, செடிநிலை, விலை முதலியவற்றின் எண்ணங்களும் மஞ்சள்நிறமான மற்றைய பொருள்களின் எண்ணங்களும் படிப்படியாகத் தொலைவிற் சென்று சிறுகச் சிறுக விளக்கம் குறைந்து அலைகின்றன. ஜேம்ஸ் என்ற பெரியாருடைய கொள்கையின்படி ஒருபொருளைச்சுற்றி யெழும் எல்லைப்புற எண்ணங்களே அதன் பொருட்குறிப் பாகும்.

இக்கொள்கையின்படி கலங்கிக் குழம்பி விளக்கமின்றிய சுற்றுப்புற நினைவுகளே குறிப்பு என்பதாயிற்று. ஆனால், ஒரு புலனைக் கண்டபோதோ ஒரு சொல்லைக் கேட்டபோதோ, மிக விளக்கமாக எழுவதொன்றனையே குறிப்பு என வழங்கிவருகின்றோம். விளக்கமில்லாதவைகளாய் நினைவிற்கு வருவனவற்றை எவரும் பொருட்குறிப் பென்று வழங்குவதில்லை. ஆதலின் இக்கொள்கை வழக்கிற்கு முற்றும் முரண்பட்டுக் கிடக்கிறதன்றோ? சொல்லுவான் குறிப்போ, புலன்களில் நாம் காணும் குறிப்போ நன்கு விளக்கமுறும்போது சுற்றுப்புற எண்ணங்கள் காட்சிப்புலனாகவும்கருத்துப்புலனாகவும் மனத்தகத்தெழுமாயின் அவற்றால் குற்றம் இல்லை. குறிப்பு விளக்கமாதல் வேண்டும்; அவ் விளக்கமொன்றே இன்றியமையாது வேண்டப்படுவது. குளிக்கின்ற பெண் மஞ்சளைப்பற்றி எண்ணும்போது அரைத்த மஞ்சட் குழம்பைக்குறித்தல் வேண்டும். சுவருக்குப் பூசவேண்டிய மஞ்சளைப் பற்றி எண்ணும்போது மஞ்சள்நிறத்தைக் குறித்தல் வேண்டும். இவ்விரண்டையும் சுற்றியலையும் எல்லைப்புற நினைவுகளாக மழுங்கிக்கிடக்கும் மஞ்சட்கிழங்கு மஞ்சள் விளையும் ஊர், முதலியவற்றின் எண்ணங்களை அந்நிலைகளில் குறிப்பதால் பயன் உண்டோ? மஞ்சள்நிறத்தைப் பற்றிப் பேசும்போதும் மஞ்சட்கிழங்கைப்பற்றிப் பேசும்போதும் மஞ்சள் என்ற சொல்லே பயன்படுகின்றது. இரண்டிடத்தும் மஞ்சட்கிழங்கு கருத்துப்புலனாக எழலாம். ஆனால் சொல்லுவோர் குறிப்பு அஃதன்று; இடத்திற்கேற்பச் சொல்லு

வோர் குறிப்பு மிக்க விளக்கமுற்றுத் திகழ்கின்றது. விளக்கமேகுறிப்பாதலின் விளக்கமின்மையைக் குறிப்பென்பது இருளை ஒளி என்பதோடு ஒக்கும்.

ஒரு பொருளைக் குறிப்பதே அப்பொருளை எண்ணுவதாம். அதன இயல்புகளைக் குறித்துணராதபோது அதனைப் பற்றி எண்ணுவது யாங்ஙனம் கூடும். உணர்வு என்பது கருத்துப்புலன் காட்சிப்புலன் குறிப்பு என்பவற்றின் இயைபேயாகும். என்றாலும் புலன்களே குறிப்பை எழுப்புகின்றன.

குறிப்பினை அகக்காட்சியால் காண முடியாது. புறக்காட்சியால் பொருளைக் காணும்போது அப்பொருளை எண்ணுகிறோம்; அகக்காட்சியால் காணும்போது அப்பொருளின் எண்ணத்தையே எண்ணுகின்றோம். ஆகவே இரண்டிடத்தும் பொருட்குறிப்பு வேறுபட்டுத் தோன்றுகின்றதல்லவா? ஆகவே குறிப்பென்பது நமது கைக்கு அகப்படுவதொன்றன்று. குதிரைவண்டியிலேறிக்கொண்டு எவ்வாறு சுற்றிச் சுற்றி ஓட்டினாலும், குதிரை நமக்கு முன்னாக ஓடுமேயன்றி வண்டியைக் குதிரைக்கு முன்னாக ஓட்ட முடியாதன்றோ? அஃதேபோலக குறிப்பெனும் குதிரையும் நமக்கு முன்னாகவே ஓடுகின்றது. குறிப்பினை, குறிக்கப்படும் பொருளினும் வேறாக வைத்து விளக்குவது இயல்வதன்று. "இன்ன பொருளைக் குறிக்கின்றேன்" என்றுமட்டுமே நாம் கூறமுடியும். குறிப்பென்பது மனதியக்கமாகும். இதனை ஒரு பெயர்ச்சொல்லாகக் கொண்டு பொருளாக்கிக் கையிலே பிடிக்க முயலுதல் நகைக்கிடமாகும்.

மற்றுஞ்சிலர் குறிப்பென்பதனைப் பொதுஉணர்வு என்பதன்பாற் படுத்தி விளக்குகின்றனர். ஒரு யானையைப் பார்க்கின்றேன். அக்குறித்த யானையின் உணர்வு சிறப்புணர்வாகும். பின்னர்ப் பல யானைகளையும் காண்கிறேன். அந்த யானை இந்த யானை என்ற சிறப்பின்றிப் பொதுவாக எல்லா யானைகளையும் பற்றியதாய் நிற்கும் அவற்றின் பொது இயல்பினை யுணர்ந்து யானை எனப் பேசுகின்றேன். இங்கு 'யானை' என்பது எந்தக் குறித்த யானையையும் சிறப்பாகச் சுட்டவில்லை. யானை எனப் பொதுவியல்பைச் சுட்டி யுணர்தலே பொது உணர்வாகும். இப்பொது உணர்வுதான் குறிப்பென்று பெயர் பெறுகிறதாம். இப் பொதுஉணர்வு, பல பொருள்களை ஒருங்குவைத்துப் பொதுநோக்காகக்காணக் கூடிய உயரிய மக்களிடையேதான் காணக்கிடக்கின்றதாம். இவ்வாறு சில உள்ளத்தியற்கைப் புலவர்கள் விளக்கிவைக்கின்றார்கள்.

உயர்நிலை யடைந்தவரிடந்தான் பொதுவுணர்வு எழும் என்றால், அவர்கள் எதிர்தான் புலன்களும் குறிப்புடையனவாகும் என்பதாயிற்று. கீழ்நிலையிலுள்ள விலங்குகள் முதலியன புலக்காட்சி ஒன்றேயுடையன; அப்புலன்களை 'இவை' என்று உணர்வதில்லை, என்பதாயிற்று. அவ்வாறாயின் சூடுண்ட தென்னாலிஇராமன் பூனை பாலை யஞ்சியது எதனால்?

இதனுண்மையைச் சிறிது இங்கு உற்று நோக்குவோம். ஒரு யானையை யான் பார்க்கின்றேன். அவ்வானைதான் யான் முதல்முதல் காணும் யானையானால், அவ்வுணர்வு புத்துணர்வாகும். முன்னே பல யானைகளைக் கண்டுவைத்துப் பின்னே இந்தயானையைக் காண்பேனானால், அவ்வுணர்வு மறித்துணர்வாகும் (Recognition பிரத்ய பிஞ்ஞாப்ரத்யக்ஷம்) முன் கண்டயானையையே மறித்தும் காணவேண்டும் என்பதில்லையே. அதனைப் போன்றதாய் அஃதாவது அதன் இனத்தைச் சேர்ந்ததாய் உள்ள எதனைக் கண்டாலும் அன்றோ மறித்துணர்வு எழுகின்றது. ஒருவகையால் நோக்குமிடத்து நம் உணர்வெல்லாம் மறித்துணர்வேயாகும். ஏன்? யானையை முதல்முதல் காணும்போதும், இதனை யானை என மறித்துணராமற்போனாலும் "இஃது ஒரு உயிர்ப்பொருள்" அல்லது "இது ஒரு பொருள்" என்றேனும் மறித்துணர்கின்றேன் அன்றோ! திடீர் என ஓர் ஒலி என் காதில் வீழ்கின்றது. அஃதோ யான் இதுவரையிலும் கேளாத புதிய ஒலி. அஃது எந்த விலங்கின் ஒலி என அறியேன்? ஆனால், ஏதேனும் ஒரு விலங்கின் ஒலியே, என்று விலங்கின்ஒலி என்ற இனத்தில்வைத்து மறித்துணர்கின்றேன். விலங்கின்ஒலிஎன உணராதபோதும் ஏதோ ஓர் ஒலி என ஒலி இனத்தில் வைத்து மறித்துணர்கின்றேன். ஆகவே ஒவ்வோர் உணர்விலும் இம் மறித்துணர்வு இவ்வகையில் கலந்தேவிளங்குகின்றது. புத்துணர்வு என்பதனைக் காண்பது அருமையினும் அருமை. இயற்கைச்செயல்களை எழுப்பும் பொருளை முதன்முதலிற் காணும்போது இப் புத்துணர்வு தனித்தெழுந்து விளங்குதல் கூடும். வானம்பாடிப் பெண்பறவை, முதன்முதலாகத் தன்னினத்து ஆண்பறவையின் பாட்டைக் கேட்கும்போது அதற்கு இப் புத்துணர்வு எழுகின்றதெனக் கூற இடமுண்டு என்பர் மக்டுகல் என்ற பெரியார்.

சிறப்புணர்வு எழும்போதே பொதுவுணர்வும் மனத்திற் படிகின்றது எனல்வேண்டும். ஒருயானையை முதன்முதலில் யான் காண்கின்றேன். பின் அதனினத்தைக்காணும்போது யானை எனச் சுட்டுகின்றேன். இம் மறித்துணர்வு எதனால் எழுந்தது. முதன்முதலில் யானையின் சிறப்புணர்வு பெற்றதே யானையின் பொதுஉணர்வு மனதில் படிந்தபடியா லன்றோ? மற்றோர் யானையைக் கண்டபோது அப் பொதுவுணர்வு நினைவிற்கு வந்து மறித்துணர்வை எழுப்பி எதிரிலுள்ள பொருளைச் சுட்டுகின்றது. சிறப்புணர்வு எழுந்தபோதேஇப்பொதுவுணர்வும்மனத்தகத்தே எழுந்ததில்லையானால், வேறோர் யானையை யானையெனச்சுட்டி மறித்துணர்தல் எங்ஙனம் கூடும்? கூடாதன்றோ? எனவே சிறப்புணர்வில் பொதுஉணர்வும் இயைந்து கிடக்கின்றது. ஆகவே, பொருளைக் குறிப்பதென்றால் அதன் பொதுஉணர்வு பெறுதலேயாகும். இப்பொது உணர்வு கீழ்நிலையிலுள்ளவைகளுக்கு மன்றோ உள்ளது.உணர்வுள்ள ஒவ்வொருஉயிருளியும் இப்பொதுவுணர்வுபெற்றே விளங்குகின்றது. நாயால்கடியுண்ட பூனை அந்த நாய் வந்தால்மட்டுந்தான் பயந்தோடும் என்பதில்லையே? எந்த நாயைக் கண்டாலும் பயந்தோடுகின்றதன்றோ? ஈது பொதுணர்வு பெற்றதன் பயனன்றோ? ஒருவகையால் நோக்குமிடத்துப் பொதுவுணர்வு பெற்றபின்பே பிரித்தறிவதால் சிறப்புணர்வு பெறுகிறோம் என்று கூறலாம். குழந்தைக்கு எல்லாப் பொருளும் தொடக்கத்தில் அம்மாவே யாம்; பின்னர் மக்கள் வடிவினர் எல்லாம் அம்மாவாகின்றனர் நாளடைவில் சிறப்புணர்வு மிகுவதால் தாய்என்றும் தந்தை என்றும், தம்பி என்றும் தங்கை என்றும் அயலார் என்றும் அறிவிலாப் பொருள்கள் என்றும் அந்தக் குழந்தை வேறு பிரித்தறிகின்றது.

ஒவ்வோர் உணர்விலும் இவர்கள் கூறும் பொது உணர்வு காணக்கிடப்பதால் அதனை உயர்நிலையறிவு என வேறு பிரிப்பதற்கு இடமில்லை. மறித்துணர்வென வேறு கூறுவதற்கும் இடம் இல்லை. இல்லாதபோது, குறிப்பென்பதற்குப் பொதுஉணர்வு என வேறுபெயர் கொடுப்பதால் பொருள் விளங்கப்போவதில்லை. எருதினையறியாதவனிடம், சென்றுஎருதென்பதே பெற்றம் என்று வேறொரு பெயர் கூறினால் பொருள் விளங்கிவிடுமோ?



# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[14-வது பக்கத் தொடர்ச்சி]

### தோற்றுவாய்

ஷேக்ஸ்பியர் நாடகங்களின் முதற்களம் எப்பொழுதும் மிகவும் முக்கியமானவைகளாயமைந்திருக்கும். பின்வரும் நிகழ்ச்சிகளைத் தழுவியிருப்பதுடன், அவைகளை நிகழ்த்துகின்ற நோக்கங்களையும், அந்நோக்கங்களுக்கு அடிப்படையான விடயங்களையும் முதற்களங்கள் நுண்ணிய குறிப்புக்களால் உணர்த்தி நிற்கின்றன. முதற்களத்தைப் படிப்பவர்களும் நடிக்கக் காண்பவர்களும், "இந்நாடகம் இன்ன கருத்தது; அதன்கண் நிகழும் பல்வேறு செய்கைகளை இணைக்கும் ஒற்றுமையின் தன்மைதான் இன்னது" என்பனபோன்றவைகளைத் தெரியாமல் தெரிந்துகொள்ளக்கூடியவர் ஆவார். இவ்வண்ணம் வருவதற்கிருக்கும் விடயங்களை ஏற்றுக்கொள்ளும்படி நம்மனத்தினை முதற்களத்திலேயே பண்படுத்திவைக்கும் சூழ்ச்சி ஷேக்ஸ்பியரின் நாடகத்திறமைகளில் ஒன்றாகும். ஆயினும் இது வோர் சூழ்ச்சி யென்பது வெளிப்படையாய்த்தெரியாது. தன் எந்திரத்தின் சூழ்ச்சிகளைக் காட்டாமல் மறைத்துவைப்பதே கலையின் சிறப்பென்று கொள்ளல்வேண்டும்.

இவ் விலக்கணத்திற்கு இந்த ஜூலியஸ்ஸீஸர் நாடகத்தின் முதற்களம் எத்தூரம் இணங்குகின்றதென்பதைச் சிறிது பார்ப்போம். "சனங்களுடைய உரிமைகளைச் செகுத்து அடிமைகளாக்கி அளவிலாக் கொடுமைகள் ஆற்றுவான் இவன்; ஆதலின் சனங்களது நன்மையைக்கருதி இவனைக் கொன்றுதொலைப்பதே தக்கது" என்று சாற்றி, ப்ரூடஸ், காஸ்ஸியஸ் முதலிய உயர்ந்த வகுப்பைச்சேர்ந்த உரோமர்கள், ஆற்றலும் புகழும் வாய்ந்த பெருவீரன் ஜூலியஸ் ஸீஸரை, உறவாடிச் சதிசெய்து கொன்றுவிடவிருக்கின்றனர். பொதுஜன நன்மையைக் காக்கவேண்டுமென்னும் செவ்விய கருத்துத்தான் இப்படுகொலைக்குக் காரணமோ, அல்லது, இச் சதிக்கொலையாளர் நெஞ்சத்தில் வேறோர் வஞ்சனையிருக்க, இப் பொதுஜனநன்மை யென்பதெல்லாம் மேல்வேடமேயாகப் புனைந்து திரிந்தார்களோ என்னுமொருஇரகசியத்தின் உண்மை யின்னதென்பது, இந் நாடகத்தை ஓதுவோர்க்கும் நோக்குவோர்க்கும் உதித்தல்வேண்டும். இதனோடு நோக்குதற்கு இன்னுமொன்றுளது. ஜூலியஸ் ஸீஸரைப் படுகொலை புரிந்த பழியைத் தீர்க்கின்றேன் என்று அறைகூவி மார்க்ஆண்டனிஎன்பவன் அப்ப்ரூடஸ்,காஸ்ஸியஸ் முதலானவர்களைப்போர்க்களத்தில்இனி நாசஞ்செய்யப்போகின்றான். இதற்கும், இப் பொதுஜனங்களே கருவியாகின்றனர். ஸீஸரின்பால் வைத்த நட்பினாற்றான், மார்க்ஆண்டனி பழிதீர்க்க விரைந்தானோ, அல்லது ஸீஸர் மாண்டொழிந்த தருணத்தைத் தன்னுடைய ஆக்கத்திற்கு இவன் பயன்படுத்திக்கொண்டானோ என்பதுங் கருதற்குரியது.

பொதுஜனங்களின் நன்மையைக் காக்குங் கடமையென்னும் பேரால் இந்நாடகத்தின் நிகழ்ச்சிகள் இயற்றப்படுகின்றவாதலின், அந்தப் பேச்சே இந்நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்தும் ஒற்றுமையாகின்றது. இந்தப் பேச்சின் மெய்ம்மையும் பொய்ம்மையும் எத்திறத்த தென்பதைத் தெளிவதன்முன், அப் பேச்சிற்குப் பாத்திரமாகிய அப் பொதுஜனங்களின் இயற்கையை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். தம் நோக்கம் ஒருவழிநிலைத்திருப்பதத்குரிய பகுத்தறிவு அச்சனங்களுக்கு இல்லை என்பதை, முன் பாம்பேயைக் கொண்டாடியதையெல்லாம் ஒரு காரணமுமின்றி மறந்து பிறகு அப்பாம்பேயிற்கு அழிவு செய்த ஸீஸரைக் கொண்டாடப்புகுகின்றதிலிருந்து ஷேக்ஸ்பியர்முதற்களத்திலேயேகாட்டிவைப்பது,இதன்பின் ஸீஸரைக் கொன்ற ப்ரூடஸ் முதலியோரை இச்சனங்களேபாராட்டுவதையும், அதற்கப்புறம் அப்ரூடஸைப் பகைத்த மார்க்ஆண்டனியைப் பாராட்டுவதையும் இயற்கையாக்குகின்றது. இதற்கெதிர், இப் பொதுஜனங்களின் சார்பாக நின்று பல சாதிக்க வருகின்றோம் என்பவர் தன்மையையும், மரூல்லஸ் ப்ளேவியஸ் என்னுமிவர்களிலிருந்து ஒருவாறு ஊகிக்கலாம். பொதுஜன நன்மையுரிமைகளைப் பாதுகாத்தற்கென்றே தேர்ந்தெடுக்கப்பெற்ற அதிகாரிகளாகிய இவர்களை அச்சனங்கள் எத்துணை இலேசாய்க்கருதுகின்றனரென்பதும்,மீண்டுமிவர்கள் அச்சனங்களை எத்துணை அவமரியாதையாய் நடத்துகின்றார்களென்பதும் இம் முதல்களத்தில் தெரிவிக்கப்படுகின்றன. இதுவுமன்றி, இதனினும் முக்கியமாய் மற்றொன்றையும் நாம் மனத்திற் கொள்ளவேண்டும். ப்ளேவியஸும் மரூல்லஸும், பொதுஜனங்களுடைய உரிமைகளுக்குமாறாக ஜூலியஸ்ஸீஸர் கொடுமைகள் செய்வானென்று அவனைப் பகைத்தார் அல்லர். தாங்கள் அவனுக்கு அடங்கவேண்டிவருமே என்ற அழுக்காறே அப்பகைக்குக் காரணம் ஆவது இந்த முதற்களத்தில் காட்டப்பட்டிருப்பதைக்கொண்டு இனிவரும் ப்ரூடஸ் முதலியவர்களுடைய நோக்கங்களையும் அளந்துகொள்ளலாம்.

இவ்வாறு இந்நாடகத்தை இழைக்கின்ற நோக்கங்கள் பொதுவகையில் குறிக்கப்பெற்றிருக்கின்ற இம் முதற்களத்தினை உட்கொண்டவர்கள் இதன் சிறப்புவகைகள் துவக்கின்ற தன்மையை இரண்டாங் களத்தில் இனிக் காணலாம்.

## அங்கம் 1. களம் 2.

இடம்:—உரோமாபுரியில் ஒரு பொதுவிடம்.

ஜூலியஸ்ஸீஸருடன் மார்க்ஆண்டனியும், கல்பர்ணியாவும் போர்ஷியாவும், டெஸியஸ் ஸிஸிரோ ப்ரூடஸ் காஸ்ஸியஸ் காஸ்க்கா என்பவர்களும், வருகின்றனர். வாச்சியங்கள் முழங்குகின்றன. பெரியதோரு ஜனக்கூட்டம் தொடர்ந்து வருகின்றது. அக்கூட்டத்தினிடையில் ஓர் நிமித்தகன் இருக்கின்றான்.

### நூல்.

**ஸீஸர்:**—கல்பர்ணியா—

**காஸ்க்கா:**—ஹோ! நிறுத்துங்கள்! ஸீஸர் பேசுகின்றார்.

[வாச்சிய முழக்கம் ஓய்கின்றது]

**ஸீஸர்:**—கல்பர்ணியா—

**கல்பர்ணியா:**—இங்குளேன் என் பெரும.

**ஸீஸர்:**—ஆண்டனி ஓடும்போது நீ அவன் வழியில் நேராக நில் (1)—ஆண்டனி.

**ஆண்டனி:**—ஸீஸர், என் பெரும.

**ஸீஸர்:**—உன்வேகத்தில் ஆண்டனி, கல்பர்ணியாவைத் தீண்டுதற்கு மறவாதே. இந்தத் தூய ஓட்டத்தில் தீண்டப்பெற்றால் மலடியர் தம் மைம்மைச் சாபத்தை உதிர்த்துவிடுவார்களென்று நமது பெரியோர் சொல்லியிருக்கின்றா ரன்றோ! (2)

**ஆண்டனி:**—நான் மறவேன். "இது செய்" என்று ஸீஸர் சொல்லு மளவிலேயே, அது செய்து முடிந்துவிடுகின்றதாகும். (3)

**ஸீஸர்:**— புறப்படுங்கள். சடங்குகளிலொன்றையும் விட்டுவிட வேண்டா.

[வாச்சியங்கள் முழங்குகின்றன]

**நிமித்தகன்:**—(4) ஓ, ஸீஸர் !

**ஸீஸர்:**—ஹ ! என்னைக் கூப்பிடுகின்றது யார் ?

**காஸ்க்கா:**—ஓசையெல்லாம் அடங்கட்டும் - மறுபடி சும்மாவிருங்கள். (5)

[வாச்சியங்கள் ஓய்கின்றன]

**ஸீஸர்:**—இந்தக் கூட்டத்தில் என்னைக் கூப்பிடுகின்றது யார் ? இவ்வாச்சியங்களை யெல்லாம் விடக் கீச் என்று ஒரு குரல், 'ஸீஸர்' எனக் கத்தக் கேட்கின்றேன். சொல்; கேட்பதற்கு ஸீஸர் திரும்பி யிருக்கின்றான் (6).

**நிமித்தகன்:**—மார்ச்சுமத்தியைக் கருத்தில் வைத்துக் காத்துக்கொள். (7)

**ஸீஸர்:**—யாவன் அவன் ?

**ப்ரூடஸ்:**—மார்ச்சு மத்தியைக் காத்துக்கொள்ளும்படி உனக்கோர் நிமித்தகன் கட்டளையிடுகின்றான் (8).

**ஸீஸர்:**—அவனை என்முன் நிறுத்துங்கள். அவன் முகத்தைப் பார்க்கட்டும்.

**காஸ்க்கா:**—ஏ, கும்பலிலிருந்து வா. ஸீஸரைப் பார். (9)

**ஸீஸர்:**—என்னெனக்கு இப்பொழு நீ இயம்ப விரும்புகின்றாய். மற்று மோர்முறை சொல் (10).

**நிமித்தகன்:**—மார்ச்சுமத்தியைக் கருத்தில் வைத்துக் காத்துக்கொள்.

### குறிப்புரை

கல்பர்ணியா, ஸீஸரின் மனைவி. உரோம்நகரப் பெருமக்களில் ஒருவனாய மார்க்ஆண்டனி, ஸீஸரின் நண்பன். போர்ஷியா, ப்ரூடஸின் மனைவி. ஸிஸிரோ, செனட் சபையைச் சேர்ந்தவன். மற்றவர் நகரப் பெருமக்கள்.

(1) இன்றையதினம் பிப்ரவரி மீ 15 உ. லூபர்கல் பண்டிகை. விளைவின்பொருட்டு உரோமர்கள் தங்கள் தெய்வத்தைக் கொண்டாடும் பண்டிகை இது. இந்தப் பண்டிகையில், தெய்வங்களுக்கு ஆடுகளையும் நாய்களையும் பலிகொடுத்தபின், சிலர் நிர்வாணமாக அக் களத்தினைச்சுற்றி ஒருவரை ஒருவர் தொடர்ந்து ஓடிவருவதுண்டு. இவ்வாறு ஓடுகின்றவர் மலடிகளைத் தொடுவார்களாயின், மலடுநீங்கி மக்கள்பெறுவார் என்பது அக்கால நம்பிக்கை. ஆண்டனி, இப்படி ஓடவேண்டியவர்களில் ஒருவன். மைம்மை—மலட்டுத்தனம்.

(2) கல்பர்ணியா ஸீஸரின் கடைசி மனைவி. பிள்ளையில்லை. பிள்ளைக்கு ஆசைப்படுகின்றான் ஸீஸர்.

(3) ஸீஸர் அதிகாரமுறையிலேயே கட்டளையிட, ஆண்டனிமுதல் யாவரும் வணக்கமுடன் செய்கின்ற பணிவு தெரிகின்றது.

(4) வருவது முன்தெரிந்து சொல்பவன். இவன் கூட்டத்தின் நடுவிலிருந்துகொண்டே ஸீஸரைக் கூப்பிடுகின்றான்.

(5) பின் சதிக்கொலையாளர்களுடன் சேர்ந்து ஸீஸரைக் கொல்கின்றவர்களில் ஒருவனாகிய இந்தக்காஸ்க்கா ஸீஸரின் வாய்பார்த்து இப்பொழுது நிற்கின்றான்.

(6) ஸீஸர் தன்னையே இங்குப் படர்க்கையில் குறித்துக்கொள்கின்றான். இவ்வழக்கம் இவனுக்கு இருப்பதைப் பின்னரும் பல இடங்களிற் காணலாம். தன்னுடைய பெருமையைத் தானே இடைவிடாமல் நினைத்துக் கொண்டிருப்பதன் காரியம் இது.

(7) மார்ச்சுமத்தி யென்பது, மார்ச்சுமாதம் 15-ஆம் தேதி. "அத்தினம் உனக்கு ஓர் ஆபத்து வரப்போகின்றது, ஜாக்கிரதை" என்று நிமித்தகன் எச்சரிக்கை செய்கின்றான்.-ஸீஸர் கொலையுண்ணப்போவது அன்றைக்கே.

(8) ஸீஸரைக் கொல்கின்ற எண்ணமேனும் முயற்சியேனும் இப்பொழுது இல்லையானாலும், பிறகு அது செய்ய நிற்கும் ப்ரூடஸே நிமித்தகனுடைய எச்சரிக்கையை ஸீஸருக்கு எடுத்துச்சொல்ல நேர்ந்த இது கருதத்தக்கது.

(9) இப்படி ஸீஸரின் வாய்பார்த்துக் கையாள்போல் விவகரிக்கின்ற இந்தக் காஸ்காவும், சதிக்கொலையாளர்களில் ஒருவன் ஆகப்போகின்றான்.

(10) ஆபத்தென்பதெல்லாந் தன்னைக் கண்டவளவில் அஞ்சி அகன்றுவிடும் என்ற பேராற்றல் பெருமிதமுடையவன் ஸீஸர். ஆதலின் தன் முகம்நோக்கி அச்சொல்லை நிமித்தகன் சொல்லத் துணியான் என்பான்போல் 'மீண்டு மோர்முறை சொல்' என்கிறான். நிமித்தகனோ அதனையே மீண்டும் சொல்கின்றனன்.



**ஸீஸர்:**—கனாக்காண்கின்றவர்களில் ஒருவன் இவன். இவனை விட்டகல்வோம். செல்லுங்கள்.

[ப்ரூடஸையும் காஸ்ஸியஸையும் தவிர ஏனையோர் போய்விடுகின்றனர்] (11)

**காஸ்ஸி:**—நீ போய்ச் சடங்குகளைப் பார்க்கப்போகின்றாயா ?

**ப்ரூடஸ்:**—நானில்லை.

**காஸ்ஸி:**—நீ போய்ப் பார்க்கவேண்டும்.

**ப்ரூடஸ்:**—எனக்கு விளையாட்டொன்றிலும் மனஞ்செல்லவில்லை. ஆண்டனியிற்கு இருக்கும் சுருசுருப்பும் ஊக்கமும் என்னிடத்தில் ஓரளவு குறைந்தேயிருக்கின்றது. (12) ஆயினும், காஸ்ஸியஸ், உன்னுடைய விருப்பத்திற்கு நான் இடையூறாக இருக்கவேண்டாம். நான் உன்னைவிட்டுப் போகின்றேன். (13)

**காஸ்ஸி:**—ப்ரூடஸ், இப்பொழுது சிறிதுகாலமாக நானுன்னைக் கவனித்துவருகின்றேன். உன் கண்களிலிருந்து மென்மையும் அன்பும் முன்போல் நான் பெறுகின்றேனில்லேன். உன்பால் அன்புபூண்ட உன் நண்பனை நீ இத்துணை வன்புடனும் அயலான் போலும் நடத்துகின்றாயே. (14)

**ப்ரூடஸ்:**—காஸ்ஸியஸ், மருட்கை கொள்ளாதே. (15) நான் என்பார்வைக்குத் திரையிட்டிருக்கின்றேனெனின், என் முகத்தின் அல்லலை என்மீதே திருப்புகின்றேன் - அவ்வளவே. (16) தம்முள் சில மாறுபாடுடைய மனோவிகாரங்களால் சிறிதுகாலமாக அலைப்புண்டிருக்கின்றேன் நான். அவ்வெண்ணங்கள் என்னையே சார்ந்து எனக்கே உரியவைகள். இதுதான் ஒருகால் என் நடத்தை இதற்கு இடந்தருகின்றது போலும். ஆதலின், என் நல்ல நண்பர்கள்—அவர்களில் காஸ்ஸியஸ், நீயு மொருவனாயிருக்கின்றாய்—துயர்கூர வேண்டா. 'தன்னுடனேயே போராடிக்கொண்டிருக்கின்ற ஏழை ப்ரூடஸ் மற்றவர்களுக்கு அன்புகாட்ட மறக்கின்றான்' என்பதல்லால் நான் பராமுகமா யிருப்பதற்கு வேறோர் பொருள் கொள்ளவும் வேண்டா. (17).

**காஸ்ஸி:**—எனின், ப்ரூடஸ், உன்னுடைய மனத்தினை யான் பெரிதும் பிழைபட மதித்திருந்தேன். ஆதலால், விலைமிகவுடைய எண்ணங்களும், தகைமைசான்ற கருத்துக்களும், என் மார்பதனில் புதையுண்டு கிடந்தன—உன்னுடைய முகத்தினை, நல்ல ப்ரூடஸே, நீ பார்க்கவல்லையோ, சொல்?

**ப்ரூடஸ்:**—காஸ்ஸியஸ், இல்லை. மற்றப் பொருள்களால், எதிரொளியினால், அன்றி, கண்கள் தன்னையே பார்த்துக்கொள்வதில்லை.

**காஸ்ஸி:**—தக்கதே அது. நீ உன் நிழலைப் பார்க்கும்படி, ஒளிந்திருக்கும் உன் பெருமையை உன்கணுக்குத் திருப்பவல்ல கண்ணடியொன்றும் நீ பெற்றிராதது அதிகமும் வருந்தத் தக்கதே. ரோம்நகரின்கண் மதிப்பிற் சிறந்தவர்களில்—சிரஞ்சீவி ஸீஸரைத்தவிர—எத்தனையோ பேர், இக்காலத்து நுகத்தடியின் பாரத்திலகப்பட்டு மறுகுகின்றவர்களாய் ப்ரூடஸைப்பற்றிப் பேசும்போது, "தன்னுடைய கண்களைப் பெருமகன் [illegible] பெற்றிருந்தா லாகாதா" [illegible] றேன் (18)

(11) இனி, காஸ்ஸியஸிற்கும் ப்ரூடஸிற்கும் நடக்கும் சம்பாஷணை மிகவும் கவனமாய்க் கருதற் குரியது. ப்ரூடஸ் இயற்கையில் மிக்க நல்லவன் என்றும் அவன் மனத்தைக் காஸ்ஸியஸ் திரித்துவிட்டானென்றும் ஷேக்ஸ்பியர்நாடக ஆராய்ச்சியாளர் எல்லோருங் கருதுகின்றனர். அது உண்மையோ அல்லது ப்ரூட்டஸ் இதயத்திலும் தீமை இருந்ததோ என்பதையும் கருதி எந்தக் கொள்கைக்கு ஷேக்ஸ்பியர்நாடகம் இடம் தருகின்றதென்பது சிந்தித்துத் தேர்ந்துகொள்ளவேண்டிய தொன்றாம்.

(12) ஊக்கமும் உவகையும் குன்றினவனாய் ப்ரூடஸ் காணப்படுகின்றான். பந்தயத்தில் நிர்வாணமாய் ஓடுவதற்கு உடன்பட்ட ஆண்டனியை இது பரிகசித்ததும் ஆகும்.

(13) நீ செல்வதானாற் செல்; நான் உடன் வரவில்லை. என்பது இதன் பொருள்.

(14) உன் 'நண்பனை' என்பது இங்குக் காஸ்ஸியஸ் தன்னையே படர்க்கையில் குறித்தவாறாகும்.

(15) என்னுடைய நடத்தையை வேறாகமதித்து மயங்காதே, என்பது பொருள்.

(16) உன்கண்கள் என்னை, உருகிய மென்மையோடும் அன்பினோடும் சிறிதுகாலமாகப் பார்ப்பதில்லை—என்று காஸ்ஸியஸ் குறைகூறியதற்கு ப்ரூட்டஸ் உரைக்கும் மறுமொழி இது. "என்பார்வையின் ஆர்வம் குறைந்திருப்பதற்கு,உன்பால் எனக்குள்ள அன்பு குறைந்ததே காரணம் என்று தப்பெண்ணங் கொள்ளாதே. என்னுடைய அல்லல்கள் அதிகம். அது என் முகத்தில் தோன்றும்; அத்தோற்றம் பிறருக்குத் தெரியாவண்ணம் மறைத்துக்கொள்ள முயல்வதால், முன்போல் நானுன்னைக் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை என நீ நினைக்க நேர்கின்றது.

(17) "என் மனது ஒருவழிப் படாமல் தவிக்கின்றது. உன்னிடத்திலேனும் மற்ற என் நண்பர்களிடத்திலேனும் எனக்கு எவ்விதக் குறையும் பகையும் இல்லை. என்மனம் தன்னுளே போராடிப் படும் சஞ்சலத்தால் நான் உன்னையும் உன்போன்ற மற்ற நண்பர்களையும் அன்புடன் முன்போல் கொண்டாட மறக்கின்றவனாதல்வேண்டும். வேறெப் பொருளும் இதற்கில்லை". என்கின்றான். மாறுபடப் புகுந்து ப்ரூடஸின் உள்ளத்தை உழக்குகின்ற மனோவிகாரங்கள் யாவை ?—ஸீஸரின்பால் இவனுக்கு உள்ள நட்பு ஒரு புறமும், ஸீஸரின் கொடுமையினின்று ஜனங்களின் உரிமையைத்தான் காப்பாற்றவேண்டும் என்னும் கடமை மறுபுறமும், ஒன்றோடொன்று ஒவ்வாதாகையால், மாறி மாறி எழுந்து, "ஸீஸரின் நேயத்திற்குப் பாதகம் செய்வதோ" என்று ஒருபோதும், "சனங்களைக் காக்காமல் யான் கைவிடுதல் தகுமோ" என்று மறுபோதும், ப்ரூடஸின் உள்ளத்தைத் தலைதடுமாறச் செய்தன என ஷேக்ஸ்பியர் நூல் ஆராய்ச்சிவல்லுனர் கருதுகின்றனர். இக்கருத்திற்கு இந்நாடகத்தின் அமைப்பும் போக்கும் ஏற்றனவாயிருக்கவில்லை என நினைக்க இடமுளது. அடுத்த வாக்கியத்திலேயே ப்ரூடஸ், "அவ்வெண்ணங்கள் என்னையே சார்ந்து எனக்கே உரியவைகள்" என்கின்றான். இப் பிரிநிலை ஏகாரங்கள், ஜனங்களின்பால் இவன்நினைவு சென்றதென்பதை மறுக்கின்றன. ஸீஸர் அடைந்துள்ள உயர்நிலைக்குத் தானே வரவேண்டும் என்னும் ஆசை ப்ரூடஸைப் பற்றிக்கொண்டிருக்கலாம். ஸீஸரை அழிக்காமல் ப்ரூடஸின் அவ்வாசை கைகூட இயலாது. ஆதலின், "ஸீஸருக்குத் துரோகம்செய்வதா, அல்லது என்னுடைய ஆசையைக் கைவிடுவதா" என்று ப்ரூடஸ் எண்ணியெண்ணி அல்லலுற்றிருக்கலாமே.

(18) ஸீஸரைக்கண்டு அழுக்காறுகொண்ட காஸ்ஸியஸ், ப்ரூடஸ் போன்றவர்களுடைய உதவியின்றி அவனை அழிக்க இயலாதென்பதை அறிவானாதலின், ப்ரூடஸ் இதற்கு உடன்படுவானோ வென்று சோதிக்கத் தலைப்

ப்ரூடஸ்:—என்னில் இல்லாததொன்றை என்னுளே யான் தேடும்படி வேண்டுகின்ற காஸ்ஸியஸ், நீ என்னை எவ்வெந்த ஆபத்துக்களுக்குள் நடத்திச் செலுத்த நினைக்கின்றாயோ? (19)

காஸ்ஸி:—ஆதலால், செவ்வியோய் ப்ரூடஸ், கேட்பதற் கமைவாய். பிரதிபிம்பத்தாலன்றி உன்னையே நீ நன்றாக நோக்குதற் கியலாதென்பதை நீ யறிகின்றாயாதலின், யான், உன் கண்ணாடியாக, உன்னைப்பற்றி நீயே அறியாதவதனை, மிகை யாதுமின்றி உனக்கே காட்டிவைக்கின்றேன் (20). நயம்மிகுந்த ப்ரூடஸ், என்மீது யாதும் சங்கை கொள்ளற்க. யான் எல்லோரிடத்தும் பொதுவாகச் சிரித்துத் திரிபவன் ஒருவனாயின்—முட்டிப்புகுந்து வற்புறுத்தும் புதியோர்க்கெல்லாம் என்னுடைய நேயத்தைச் சூளுரைத்து யான் சுவையற்றதாக்குவதுண்டாயின்—அல்லது, எவரையேனும் யான் நயந்து குலவி இறுகத்தழுவிப் பிறகு புறங்கூறியதாக அறிந்திருப்பாயாயின்—அல்லது, வருகின்ற கும்பலுக்கெல்லாம் விருந்திட்டுக் கொண்டாடுகின்றவனாக என்னை நீ அறிவாயாயின்—அப்பொழுது என்னை நீ ஆபத்திற்கிடமானவன் என்று வைத்துக்கொள். (21)

[வாத்திய முழக்கமும் சனங்கள் ஆரவாரமும் கேட்கின்றது]

ப்ரூடஸ்:—இவ்வாரவாரத்தின் அர்த்த மென்னவோ! சனங்கள், ஸீஸரைத் தங்கள் அரசனாக அமைக்கின்றாரென அஞ்சுகின்றேன். (22).

காஸ்ஸி:—ஓ, அதனை நீ அஞ்சுகின்றனையோ? எனின் அதனை விரும்புகின்றாயல்லையென யான் எண்ணல் வேண்டும்.

படுந் தந்திரம் இது. வெளிப்படையாய்க் கேட்கக் கூடிய விடயமோ இது வன்று. அப்படிக் கேட்டு, ப்ரூடஸ் "ஏ, பாதகா, ஸீஸருக்கோ துரோகம் நினைக்கின்றாய்" என்று சொல்லிவிடுவானாயின் காஸ்ஸியஸ்கதி என்னாம்?

(19) ப்ரூடஸும் ஒருவாறு காஸ்ஸியஸின் நிலையிலே இருக்கின்றான். ப்ரூடஸின் கருத்து யாவதாயினும் அது நிறைவேறுவதற்குக் காஸ்ஸியஸ் போன்றவர்களுடைய உதவி வேண்டும். இவனும் வெளிப்படையாய்க் கேட்பது விபரிதமாய் முடியலாம். ஆதலின், காஸ்ஸியஸின் எண்ணத்தை ஒருவாறு ஊகித்த இவனும், அவன் வாயிலிருந்தே வரும்படி தூண்டுகின்றான்.

(20) "நாமிருவம் சேர்ந்து ஸீஸரைக் கொன்றுவிடுவோமா" என்று கேட்பது எளியதன்று. ஆதலின் காஸ்ஸியஸ் தன்னுடைய தகைமையைத் தெரிவிப்பான்போல் சொற்களைப் பலபடப் பெருக்குகின்றான்.

(21) இதன் பொருள்:—கண்டவர்களுட னெல்லாம் கூடிக்களிப்பவனல்லேன். மேல்விழுந்து வந்துகொண்டாடுகின்றவர்களுக் கெல்லாம் என்னுடைய நட்பை எளிதில் அளித்துவிடுபவனும், அவ்வாறு அளிப்பதுபோல் பாவனைகள் செய்பவனும் அல்லேன். இச்சகம்பாடி இழைந்திருந்து பிறகு வசைகள் ஏவுகின்றவனும் அல்லேன். என்பால் சேர்கின்றவர்களையெல்லாம் நான் வரவேற்பவனுமல்லேன். நட்பினை எக்காலத்திலும் ஆராய்ந்தே கொள்வோனும் கொடுப்போனும் ஆகின்றவன் யான். எனின் உன்பால் யான்வைத்த நேயம் எத்துணை நிச்சயமானதென்பதை நீ உணர்தல்வேண்டும். மற்று, நானுன்னை ஆபத்திற்குள்ளாக்குவேன் என்று எண்ணலாமோ.

(22) 'அஞ்சுகின்றேன்' என்றமையால் தனக்குச் சம்மத மில்லாமையை ப்ரூடஸ் தெரிவிக்கக் காஸ்ஸியஸ் அதனை நிச்சயஞ்செய்துகொள்கின்றான்.

—*=*—

# க ம் ப ரா மா ய ண ம்

[16-வது பக்கத் தொடர்ச்சி]

## ஆரணிய காண்டம்—1. விராதன் வதைப் படலம்.

கலிகால மிதுவென்னப் புலமையாற் காட்டினார்

அருந்தவ அத்திரிமுனிவன் பத்தினி அவ் வநசூயையால் கற்பின் திற முரைக்கப்பெற்ற தன் காதலி சீதையோடும், தன்பால் சிந்தை நிறைந்த அன்புடைய தம்பி இலக்குவனோடும் இராமபிரான் அவ்வயின் நீங்கித் தண்டகவனத்தி லடிவைத்தலும், அந்தகனே அஞ்சித்தளரும் ஆற்றலுடைய அரக்கன் விராதனே எதிர் வந்தான். முன் தாடகையை இராமனது சரத்திற்கு இரையாகக் கொணருங்கால் கம்பருக்கிருந்த ஊக்கம் இவ்விராதனைப் படுகளத்திற்கு உய்க்கவில்லை. சிலம்புகள் சிலம்பிடை செறித்த கழலோடும், எயிறுதின்று, நிலக்கிரிகள் பின்தொடர, மைவரை நெருப்பெரிய வந்ததென வந்த அவ்வரக்கியின் வருவகையோடு ஒப்புநோக்குங்கால் இவ் விராதன் வருகை, 'அடுவேன்' என்னாது 'கடனே' என்று வருவதுபோற் றோன்றுகின்றது. கன்னிப்போர் அதனைப் புரிவித்தலில் கம்பருக்கிருந்த ஆர்வம் இப் பின்னைப்போரில் பிறவாமை இயற்கையே. ஆதலின்,

செஞ்சு டர்ச்செறி மயிர்ச்சுருள் செறிந்த செனிய
னஞ்சு தட்டுருவு பெற்றிடை நடந்த தெனமா
மஞ்சு சுற்றிய வயங்குகிரி பாத விசையிற்
பஞ்சு பட்டது படப்படி யின்மேன் முடுகியே

[சிவந்த நெருப்புப்போன்று அடர்ந்து சுருண்ட மயிர்கள் நெருங்கிய தலையை உடையவனாய், விஷமானது வலிய ஒருஉருவு பெற்று நடந்து வந்ததுபோல, பெரிய மேகங்கள் சூழ்ந்து தங்கி விளங்குகின்ற மலைகள், அவன் கால்களின் நடைவேகத்தால் பஞ்சுபோல் பறந்து பின் வர, விரைந்து.]

வந்தனன் என்னுங்கால், நிலக்கிரிகள் பின்தொடர வந்த தாடகை நினைக்கப்பெறுகின்றன ளாயினும், பின்,

புண்டு ளங்கியன கண்கள் கனல்பொங்க மழைசூழ்
விண்டு ளங்கிட விலங்கல்கள் குலுங்க வெயிலுங்
கண்டு ளங்கதிர் குறைந்திட நெடுங்க டல்சுலா
மண்டு ளங்கவய வந்தகன் மனந்த ளரவே

[புண்போன்ற கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறக்க, (அதனால்) மேகங்கள் சூழ்ந்த ஆகாயம் நடுங்கவும், மலைகள் அசையவும், சூரியனும் பார்த்து மனம் அழியவும் பெரிய கடல் சூழ்ந்த பூமி நடுங்கவும், வலிமையுடைய யமனும் மனந்தளரவும்.]



விராதன் வருவதானான், என்னுமிடத்துத் தாடகைக்கு இவன் தோற்றவாறு தெரிகின்றது. மிதித்த நிலங்குழிய வேலைச்சலம் அக்குழியிற் பாய அத் தாடகை எனுந் தையலாள்வந்தபோது அஞ்சிப் பிலம்புக்க அவ்வனற் றறுகண் அந்தகன்,இன்றிவ் விராதன் வருகையால் மனமட்டும் சிறிது தளர்ந்தவனாயினான். இன்னணம், அடுதொழில் கூற்றுவனை நடுக்கங்காணும் வகையில் தாடகைக்கு விராதன் தோற்றானெனும், கம்பரோ தனக்குத் தான் தோற்றவர் ஆகவில்லை. முன் அழிவிலா உயிருடையோர் அரக்கர் என்ற பயம் நிலைத்திருந்த மனத்தினனாய அந்தகன், தாடகைக் கஞ்சிப் பிலம்புக் கொளிந்தான். மற்று இராமனே தான் செய்த கன்னிப்போரில், அரக்கருயிரையும் முகந்தந்த அந்தகனுக் கூட்டவல்ல சரங்கள் தன் தூணியிலிருப்பதைக் காட்டினன். இப்பொழுதும் இவ் விராதனை எதிர்க்க நிற்பது அவ்விராமனே எனின், விராதன் விளைத்த அச்சத்தினிடையே அவன் சாகவும் சாகலாம் என்ற நம்பிக்கையும் கலந்திருத்தல் வேண்டும். ஆதலாற்றான், "யாவதாகுமோ" என்று மனந்தளர்ந்தானேயன்றி இன்று அந்தகன் பிலம்புக்கொளிந்துகொள்ளற்கு வேண்டிய அச்சம் எய்தவில்லை. இன்னும் இவன்,

குன்று துன்றின வெனக்குமுறு கோப மதமா
ஒன்றி ஞென்றிடை யடுக்கின தடக்கை யுதவப்
பின்று கின்றபி லனிற்பெரிய வாயி னொருபான்
மென்று தின்றவிளி யாது விரியும் பசியொடே

[மலைகள் நெருங்கியவைபோல, தன் விரலினிடையில் அடுக்கிவைத்திருக்கின்றனவும், முழங்குகின்ற கோபத்தினையுடையவைகளும் ஆகிய மதயானைகளை ஒன்றொன்றாகத் தன் பெரியகைகள் எடுத்துக் கொடுத்துக்கொண்டிருக்க, அவற்றை, செல்லச் செல்லப் பின்னுஞ் செல்கின்ற குகைபோன்ற பெரிய வாயின், ஒரு பக்கத்தில் மென்று தின்றும் அடங்காமல் அதிகமாகின்ற பசியுடன்—வந்தான்]

இவ்வாறெல்லாம் வருகின்ற இவ்வரக்கனது வருணனையினிடையே,

தங்கு திண்கரிய காளிமை தழைந்து தவழப்
பொங்கு வெங்கொடு மையென்பது புழுங்கி யெழமா
மங்கு பாதகம் விடங்கனல் வயங்கி நிமிரக்
கங்கு பூசி வருகின்ற கலிகால மெனவே

[தங்கிய வலிய மிகுந்த கறுப்புச் செழித்துப் பெருகவும், பொங்குகின்ற வெவ்விய கொடுமையென்பது புழுங்கி வளரவும், மிகக் கொடிய பாவமும் விஷமும் வெம்மையும் விளங்கி நிமிரவும்,இருளைப் பூசிக்கொண்டு வரும் கலிகாலம் என்னும்படி]

வந்தான் என்றுரைக்கு மிது நமது எண்ணத்தைச் சிறிதுநேரம் தன்பால் நிறுத்தி வைத்துக்கொள்ளுந் தன்மைத்து.

கலிகாலமென விராதன் வந்தனன் என்னுமிது அரிமா நோக்காய் நிற்கின்றது. அறியாமை என்னும் கரியஇருளை எங்கும் விரித்துப் பரப்புதலும், அமைதியற்ற ஒரு வீண் வேகமும், மெய்க்கல்வி கற்காத கயமையும்,எடுத்தெடுத்து வாய்மடுத்துண்ணும் வேட்கையும், எத்துணை உண்பினும் அடங்காப் பசியும், இக்கலியுகப் பெருமையாதலின், விராதன், காளிமை தழைந்து தவழவும், விசையிற் பஞ்சுபட்டது படப் படியின்மேல் முடுகியும், புண்துளங்கிய கண்களோடும், மதமா ஒன்றினொன்று மென்று தின்றுகொண்டும், அடங்காப் பசியினுடனும், வருபவனாயினன். 'கற்றேம் பல கற்றேம்' என்னும் ஆரவாரம் அதிகமேயாயினும் இவைதாம் மெய்க்கல்வி அன்மையின், கலியின் கண்கள், திருவள்ளுவர் உரைத்த இலக்கணத்தின்படி, புண்களே ஆதல்பற்றி, கலிகாலமென வரும் விராதனது கண்களும் புண்களேயாய்த் துளங்கின. மெய்க்கல்வி கற்றவர் கண்களிலிருந்து தண்ணளி பெருகுவதற்கெதிர், அஃதில்லாதார் புண்களினின்று கோபமும் பகையுமே பொங்குகின்ற புன்மையைத் தழுவி விராதனது புண்துளங்கிய கண்கள் கனல் பொங்கியதையும் கம்பர் காட்டினார். இதனிடையில், ஞானவான்களாய் இருப்பவர்கள் 'என்செய்ய வல்லேம்' என்று ஏக்கம் மிகக்கொண்டு ஒடுங்கும் நீர்மை, "வெயிலுங் கண்டு உளம் கதிர் குறைந்த' தென்றதால் குறிக்கப்பெற்றது. இன்னவாறு இயங்கும் கலிகாலச் செய்திகளின் நோக்கமும் செய்கையும் எத்திறத்தன என்பதைப் பின்னர் விராதன் சாபம் நீங்கித் தன் சரித்திரத்தை உரைப்பதனகவையின் கம்பர் தெரிவிக்கின்றார்:—

"குபேரன் ஆள்கின்ற அளகாபுரியில் உள்ளவனாகிய நான் இவ்வுலகத்தே வந்து பிறந்து இந்த நிலைமையை அடைந்தேன். என் பெயர் தும்புரு. நர்த்தனம் செய்கின்ற அரம்பை என்பவள் பெரிய நடனசபையில் வந்து நின்று பாடலால் மோகங்கொண்டு அவளோடு உவந்து ஊடலுங் கூடலும் புரிந்து இந்த அரக்கர் சரீரத்தை அடைந்தேன். இந்தக் காமத்தினால் நான் செய்த குற்றத்திற்காகக் குபேரன் இரக்கமின்றி என்னைச் சபிக்க நான் கிலிஞ்சன் என்னும் அரக்கனுக்கு மகனாயினேன்.

அன்று மூல மாதியாய்
இன்று காறு மேழையேன்
நன்று தீது நாடலேன்
தின்று தீய தேடினேன்

[முதல்வனாகிய இராமனே, அன்றையிலிருந்து இந்நாள் வரையிலும், நல்லது எது தீயது எது என்று ஆராயாதவன் ஆகி, மூடனாகிய நான், தின்று தின்று தீயவைகளையே தேடித் தேடிச் செய்பவன் ஆயினேன்]

எனத் தன் வரலாற்றினை விளம்புகின்ற விராதன் கலிகாலத்தின் தன்மையை உற்றுணர்ந்து விளக்கினான். "நன்று தீதுநாடாமல் தின்று தீய தேடலே" கலிகாலத்தின் கருமமாவதைப் பல சொல்லிப் பெருக்கவேண்டா. "தின்று தீயத் தேடினேன்" என்று பாடம் உளதாயின் அது இன்னும் ஏற்புடைத்தாகும்.

இத்தகைய விராதன், "நில்லும் நில்லும்" என வந்து ஒரு கணத்தில் சீதையைக் கவர்ந்துகொண்டு விசும்பின்கண் எழுதலும், காளைமைந்தர் அதுகண்டு கோபம் மிகுந்தவராய், "வஞ்சனையடா, எங்ககல்கின்றாய்" என உரப்பியதற்கெதிர் அவன், "யான் சாதியாதன இல்லை. உங்கள் உயிர் தந்தனன் அடா. மாது இவளை என்பால் விட்டுப் போங்கள்" என்று முழங்குமளவில், இராமன், சிறு முறுவல்செய்து நாணேவி எழுப்பி வாளிகள் அழுத்தியும் அவ்வரக்கன் மாயாமை கண்டு அவன் கரங்களைத் துணிபபம் என்று மைந்தரிருவரும் அவன் தோள்கள் மீதேற, இவர்களைத் தூக்கிக்கொண்டு அவன் ஓடுவது கண்ட சீதாபிராட்டி,

அன்னையேயனையவன் பினறவோர்கடமைவிட்
டென்னையேநுகர்தியென்றனளெழுந்துவிழுவாள்

[தாயே போன்ற அன்பு எவ்வுயிர்மாட்டும் உடைய இத் தவசிகளைவிட்டு, அதற்குப் பதில் என்னையே உண்பாய், என்று எழுந்து விழுந்தும்.]

தொடர்வா ளாயபோது இளையவன் இரக்கமுற்று இராமனைத் தொழுது "தேவி துயர்கூர விளையாடல் தொழிலோ" என எடுத்துக் கூற, இராமன் புன்சிரிப்புடன் உதைத்தவோர் உதையினால் விராதன் விழுந்தனன். பிறகு திருக்குமார் இவ்விருவரும் ஒரு குழி வெட்டி அதனில், "அன்பர் கருதிற்று உதவும்சேவடியினால்" இராமன் விராதனை உந்தினன்.

## கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதவர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவுநாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

### 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. கள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E N. தணிகாசல முதலியார், B .A. B. L ) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், இம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0

காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லேதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏஜெட்டெனுக்களுக்கு மேல் இரயில்வே கடடணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.



## வர்த்தமானம்

அமெரிக்க ஐக்கியநாட்டுத் தூதராக இங்கிலாந்திலிருந்த ஜெனரல் டாஸ் தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டுத் தமது பாங்குத்தொழிலில் ஈடுபட உத்தேசித்துள்ளார் என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

பிரஞ்சு அரசாங்கத்தின் அயல்நாட்டு விஷய மந்திரியாயிருந்த எம். பிரயாண்டு தமதுபதவியைச் சென்றவார இறுதியில் ராஜிநாமாச் செய்துவிட்டார் என்றும், அவர் அப்படிச் செய்ததற்குக் காரணம் உடல் நலக்குறைவென்று கூறுகின்றார் என்றும் அயல்நாட்டுச்செய்தி கூறுகின்றது.

***

இராஜப் பிரதிநிதியின் நிர்வாகசபையின் அங்கத்தினர் ஸ்தானம்வகித்த ஸர். மகமத் ஷாபி இறந்துபோனார். அதனால் காலியானவிடத்திற்கு நவாப் சஹாத்ரி என்பவர் நியமிக்கப்பெற்றுள்ளார். இவர் முகமதியர் பிரதிநிதியாக வட்டமேஜை மஹாநாட்டிற்குச் சென்றிருந்தவர்.

***

ஜப்பான் அரசாங்கக் காப்பினட்டுச் சபை கலையும் போ லிருக்கின்றதாம் சமீபத்தில் டோக்கியோவில் அரசனைக்கொல்ல முயற்சி நடந்ததென்றும், இத்தகைய அராசக முயற்சியை இக்காபினட்டால் தடுக்க முடியாமையால் அது கலைப்போகின்றதென்றும், இனி தேசியக்கட்சியார் காபினட் சபையை அமைப்பார் என்றும் தெரிகின்றது.

***

சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற கோஸ்வாமி என்னும்வங்காளஇளைஞர் சிறிதுகாலமாகச் சக்கிலித்தொழிலைமேற்கொண்டிருந்தார் என்றும்இப்பொழுது அத்தொழிலை விடுத்து விவசாயத் தொழிலை மேற்கொள்ளப் போகின்றாரென்றும் தெரிகின்றது. ஜனாப் ஹாஸன் இமாமம் என்பவர் இளைஞர்களிடம் விவசாயத்தொழில் ஊக்கம் ஏற்பட வேண்டி 40000 ஏக்கர் பூமியை அளித்திருக்கின்றனராம்

***

சீனா தேசத்தில் ஒரு நூதன புஷ்பச் செடியிருக்கின்றதாம். இச்செடியின் மலர் இரவில்தான் மலருமாம். இரவு பனிரண்டு மணிக்கு இப்புஷ்பம் மலர்ந்துவிடும்; புஷ்பத்தின் சுற்றளவு 20 அங்குலமிருக்குமாம். 12 மணிக்குப் பிறகு புஷ்பம் நீல நிறத்தையடையுமாம். சீனர்கள் இம்மலரைத் தெய்வமாகக் கொண்டாடுகின்றார்களாம். இப்புஷ்பத்தைத் தரிசிப்பதால் காரியசித்தி ஏற்படும் என்று சீனர்கள் நம்புகின்றனராம்.

***

காலண்டர் வரவு:-இரங்கூனில் பல ஆண்டுகளாகப் புத்தகவியாபாரம் செய்துவரும் நவீனகதா புத்தகசாலையினர் புதுவருடக் காலண்டர் ஒன்றை நமது பார்வைக்கு அனுப்பினர். அதில் ஆங்கிலத் தேதியோடு தமிழ்த்தேதியும், இராகுகாலம், குளிகைகாலம்எமகண்டம் முதலிய பாஞ்சாங்கங்களும்குறிக்கப்பட்டிருக்கின்றன. விடுமுறை நாட்களும் இந்து விரத தினங்களும் குறிக்கப்பட்டுள்ளன. இதனுடன் மகமதிய மதத் தேதிகளும் பண்டிகைத் தினங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எனவே இக்காலண்டர் மிகவும் பயன்தருவதாகும்.

***

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பெனியார் புதிய முறையில் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி ஒன்று எம் பார்வைக்கு அனுப்பப் பெற்றிருக்கின்றது. முதலில் பிரீமியம் குறைந்ததாயிருக்கப் பிறகு அது உயர்வது இதுவரையிற் சாதாரணமாயிருக்க இந்தப் பாலிஸி, முதல் ஐந்துவருடங்களில் உயர்ந்த பிரீமியம் கட்டவேண்டியதாகவும் பிறகு குறைவதாகவும் மாற்றப்பட்டிருப்பது மிகவும் அறிவும் அநுபவமும் வாய்ந்த ஏற்பாடென்றே எண்ணுகின்றோம். ஏனெனில் தற்காலம் தன்னுடைய சக்தி எவ்வளவென்று துணிவது போன்ற நிச்சயம் பிற்காலத்திற்குக் கொள்ள முடியாது. வருடத்திற்கு ஆயிரத்திற்கு 15 ரூ. போனஸ் காரண்டி செய்திருப்பதுடன், நான்கு வருஷம் பிரீமியம் செலுத்தியாய்விட்டால், பிறகு பிரீமியம் செலுத்தத்தவறினாலும் பாலிஸி, லாப்ஸ் ஆகாதென்னும் ஏற்பாடும், இந்தப் புதிய முறையை மிகவும் சிறந்ததாகச் செய்கின்றது.

***

சிவநேசர் திருக்கூட்டம்:—சிவநேசர் வருடக் கூட்டம் ஜனவரி7-ந்தேதி சிதம்பரத்தில் கூடியது. ஸ்ரீமான் சரவணப் பிள்ளை என்பார் இக்கூட்டத்தின் தலைமை வகித்தார். ஸ்ரீமான்களான காரைக்குடி சேவு. மெ. மெய்யப்ப செட்டியாரும் வேறு சிலரும் அரிய பிரசங்கங்களை நிகழ்த்தினர். மறுநாட் கூட்டத்தில் திருவாடுதுறை ஆதீனம் சங்கரலிங்கத் தம்பிரான் தலைமை வகித்தார்கள். கண்டனூர் வாசியான தெ. அரு. சித. அரு. இராமநாதம் செட்டியார் 'அறிவின் செல்வம், என்னும் விஷயத்தைப்பற்றி மேற்கோள்களுடன் விரிவாகப்பேசினர். காஞ்சீபுரம் சைவப் புராணிகர் அ. க. பொன்னுசாமி முதலியார் 'அறம், என்னும் விஷயமாய்ப் பேசினர். திருநாரையூர் தேவஸ்தான தருமகர்த்தாவான முத்துக் குமாரசாமி பிள்ளை 'நம்பியாண்டார் நம்பி' என்னும் விஷயமாய்ப்பேசினர். சிதம்பரம் சைவக் கலாசாலைமாணவர் சிலரும் பேசினர். இறுதியில் தலைவர் இத்தகைய சைவசபைக் கூட்டங்களினல் ஏற்படும் நன்மையை எடுத்துக்கூறினர். சபை பின்பு நிறைவெய்திக் கலைந்தது.

***

இலங்கைத்தீவில் மாந்தளை யென்ற ஊர் ஒன்று இருக்கின்றது. அதற்கு 4 மைல் தூரத்தில் தேயிலை காப்பி பயிரிடும் தோட்டம் ஒன்று இருக்கின்றது. சென்ற மாதக் கடைசியில் ஒருநாள் தோட்டக்கூலிகள் வேலை செய்துகொண்டிருக்கையில் அருகிலுள்ள ஒரு பெரியமரத்தடியில் ஒருசப்தம் கேட்டதாம். கூலிகள் பயந்து அப்பால் விலகினராம். அப்பொழுது அப்பெரியமரம் பம்பரம்போல் சுற்றியதாம். அதற்கு அருகாமையில் இருந்த ஒரு பெரிய மரம் பூமிக்குள் சென்றதாம். கூலிகள் பயந்து தோட்ட மேற்பார்வை அதிகாரியை அழைத்து வந்தனர். அவர் வருவதற்குள் மரம் மறைந்து விட்டது. மரம் மறைந்த விடத்தில் 50 அடி சுற்றளவுள்ள பெரிய குழி ஏற்பட்டுள்ளதாம். அந்த விடத்திற்கு எவரும் செல்லாதபடி இப்பொழுது பந்தோபஸ்து செய்யப்பட்டுளது. கூலிகள் எவரும் ...ளாகவில்லை என்று இலங்கைச் ... கூறுகின்றது.

KALANILAYAM
REG. NO. M, 2324.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"




பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனாம்

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

## 1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

| விலை உள்நாடு | | விலை வெளிநாடு |
|---|---|---|
| ,, 9-0-0 | அரைலெதர் பயிண்டு | ,, 10-8-0 |
| ,, 8-8-0 | காலிகோ | ,, 10-0-0 |
| ,, 7-8-0 | (பயிண்டு செய்யாதது) | 9-0-0 |

ரயிலில் அனுப்பப் புத்தகமொன்றிற்கு 6 அணு ஆகும். தபாலில் அனுப்பவேண்டுமானல் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

எற்படுத்தியது] நாஷனல் [1906

## இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு
பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு
இவற்றிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஐவேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

---

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

## :: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

## :: உத்தம தோழன் ::

அறியாமையினல் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

## — திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)